இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 223 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(02.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 11, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை

KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
Cash or Card

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472



ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம். ( படப்பிடிப்பு: எசான் தசநாயக்க)



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)



தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம். (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

## இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு

### ஜனாதிபதி ரணில் உறுதி



இலங்கை முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின், முதலில் நாட்டில் உள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இது குறித்து பேச்சு நடத்துகிறோம். இந்த வருட இறுதிக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது. பெரும்பான்மை சிங்கள மக்களையும் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை விடயத்தில் தூரம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகிறேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின் தயவு செய்து இந்த பொறிமுறைக்குள் வந்து விசேடமாக பாராளுமன்றத்தில் ஒரு அரசாங்கமாக நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## எமது ஆட்சியில் ஐ.எம்.எவ். ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்

### மே தினக் கூட்டத்தில் சஜித் சூளுரை

'தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மக்களுக்கு சாதகமானதாக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் புதுப்பிக்கப்படும்' "வேலைத்தளத்தில் ஆரம்பிக்கும் - தாய்நாட்டின் போராட்டம்" எனும் கருப்பொருளில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதியுடனேயே அரசாங்கத்துக்குச் செல்வோம் என்றும் அந்த அரசாங்கத்தில் தற்போதைய சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் நிச்சயம் புதுப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நேற்று (01) கொழும்பு, ஏ.ஈ.குணசிங்க மைதானத்தில் இடம்பெற்றது.

02 பக்கம்



### வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு

## ஐந்து கட்டங்களில் தீர்வை வரிச்சலுகை

வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு விமான நிலையங்களில் வழங்கப் படும் தீர்வை வரிச் சலுகை நேற்று (01) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கட்டங்களின் கீழ் இந்த வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படுவதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அதன் பிரகாரம், 2400 முதல் 4799 டொலர் வரை அனுப்பும் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு 600 டொலர் மேலதிக தீர்வை வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

மேலும், 4800 முதல் 7199 டொலர்வரை அனுப்பிவைப்போருக்கு 960 டொலர் மேலதிக தீர்வை வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.



## தவறான தீர்மானங்களால் ஆட்சியை இழந்தாலும் மீண்டும் எழுவோம்

### மே தினக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ

தவறான தீர்மானங்களால் நாங்கள் ஆட்சியில் பாதிப்பை எதிர்கொண்டோம். ஆனாலும் அந்த தவறான தீர்மானங்களால் வந்த அனுபவங்களைப் பாடமாக கொண்டு புதிய பாதையில் பயணிக்க தயாராகிறோம். மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

02 பக்கம்

## எரிபொருள் விலை குறைப்பு



எரிபொருள் விலை நேற்றுமுன் தினம் (30) நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு அறிவித் துள்ளது.

அதனடிப்படையில், 92 ரக ஒக்டேன் பெற்றோல் லீற்றரொன்றின் விலை 7 ரூபாவினால் குறைக்கப்படுவதோடு புதிய விலை 333 ரூபாவாகும். மேலும், 95 ஒக்டேன் பெற்றோல் லீற்றரொன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படுவதோடு, புதிய விலை 365 ரூபாவென அறிவிக் கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## இந்திய விமானப்படை தளபதி நேற்று வருகை



இந்திய விமானப்படை தளபதி எயார் சீப் மார்ஷல் வி.ஆர்.சௌதாரி, இலங்கை கடற்படைத் தளபதி எயர் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் அழைப்பின்பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று (01) நாட்டுக்கு வருகைதந்தார்.

02 பக்கம்

## இன்சுலின் செலுத்தி மனைவியை கொலைசெய்யும் முயற்சி தோல்வி

### திருகோணமலை வைத்தியர் கொழும்பில் கைது



இளம் மனைவிக்கு இன்சுலின் ஊசியை பலவந்தமாக செலுத்தி கொலை செய்ய முயன்ற சந்தேகத்தில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் (30) கைதுசெய்துள்ளனர்.

02 பக்கம்

## பௌசிக்கு சஜித் அணி சிவப்புக் கொடி

ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாக ஏ.எச்.எம். பௌசியை பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்துக்கு அழைக்காதிருக்க அக்கட்சி தீர்மானித்துள்ளது. பௌசிக்கு எதிராக எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையின் முதற் கட்டம் இதுவென அக்கட்சி அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை மீதான பாராளுமன்ற விவாதத்தின் பின்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பை புறக்கணிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தது. எனினும், கட்சியின் தீர்மானத்தை மீறி உடன்படிக்கைக்கு ஆதரவாக பௌசி வாக்களித்திருந்தார். அதற்கு எதிராகவே அக்கட்சி அவர்மீது நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கமெண்ட் கந்தர்...

பெயர்தான் மே தினக்கூட்டங்கள்.. ஒண்டிலையும் தொழிலாளரை பத்தி பேசியதா இல்ல.. எல்லாத்திலையும் அரசியல் பேச்சுகள்தான்..



## புதிய முதலீட்டுக்கு தயாராகிறது சீனா

### டுபாய், சிங்கப்பூர் நாடுகளுக்கிடையே ஆழ்கடல் பொருள் பரிமாற்றத்துக்கும் திட்டம்

(நமது நிருபர்)

இலங்கை துறைமுகத்தில் கேந்திர மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்க 02 பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக சீன அரசுக்கு சொந்தமான நிறுவனம் நேற்று (01) அறிவித்துள்ளது.

சைனா மேர்ச்சன்ட்ஸ் குரூப் என்ற மிகப்பெரிய வணிக நிறுவனம் கொழும்புத் துறைமுகத்தில் 392 மில்லியன் டொலர் பெறுமதியான திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

02 பக்கம்

## எரிவாயு விலை குறைவடையும்

### சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

சமையல் எரிவாயுவின் விலை இன்னும் சில தினங்களில் குறையும் என ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். பணவீக்கம் 70சதவீதத்திலிருந்து 35சதவீதமாக குறைந்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அதை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வர முயற்சிக்கிறோம் என்றும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய சாகல ரத்நாயக்க, எரிபொருள் விலை குறைந்துள்ளதால், அடுத்த சில நாட்களில் எரிவாயுவின் விலையும் குறையும் என நம்புகிறோம் என்றார்.

### உஷ்



மேல்மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க, வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோரை பதவிகளில் இருந்து நீக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்கள் இருவரும் தங்களது மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடத்துவதாக இந்த எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், இந்தக் கோரிக்கை குறித்து ஜனாதிபதி இதுவரை எதுவும் கூறவில்லையாம்.






*உத்தர லங்கா சபாகய மே தினக் கூட்டம். (படப்பிடிப்பு : லலித் பெரேரா)*







*தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)*

## புதிய முதலீட்டுக்கு...

இதுவே துறைமுகமொன்றில் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீடாக காணப்படுவதுடன் தற்போது 02 பில்லியன் டொலரில் முதலீட்டை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முதலீட்டின் ஊடாக ஏற்கனவே முன்னெடுக்கப்படும் திட்டத்தின் 70 வீதம் இந்நிறுவனத்துக்கு உரித்தாவதுடன் டுபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கிடையிலான ஆழ்கடல் பொருள் பரிமாற்றங்களுக்கும் அடித்தளமிடுவதாக அமையப்பெறவுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய விமானப்படை...

இலங்கை கடற்படை பிரதானி எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ இலங்கைக்கான உதவி இந்திய உயர்ஸ்தானிகர் விநோத் கே.ஜேகப் ஆகியோர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவரை வரவேற்றனர்.

வி.ஆர். சௌதாரியின் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர், பாதுகாப்புப் படையணியின் பிரதானி, ஏனைய தளபதிகள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல் நடத்தவுள்ளதாக இந்திய தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய விமானப்படைகளுக்கிடையில் ஒத்துழைப்பினை மேம்படுத்தல், கூட்டு பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப அனுபவப் பகிர்வுகள், சமுத்திர கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல்கள் இந்த விஜயத்தின்போது பிரதானமாக முன்னெடுக்கப்படவுள்ளன.

## இன்சுலின் செலுத்தி மனைவியை...

அதிகபடியான இன்சுலின் ஊசி மூலம் மயக்கமடைந்த பெண் ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 05, லெயார்ட்ஸ் வீதியில் வசிக்கும் 33 வயதான வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் மனைவியை கொலைசெய்யும் நோக்கத்தில் அதிக இன்சுலின் மருந்தை உடலுக்குள் ஏற்றியுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இன்சுலினை மனைவியின் உடலுக்கு ஏற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஊசி சந்தேக நபர் வசித்துவந்த இல்லத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்சுலின் மருந்து சில நாட்களுக்கு முன்னர் அந்தப் பெண்ணின் உடலில் ஏற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## எரிபொருள் விலை குறைப்பு...

அத்தோடு, ஓட்டோ டீசல் லீற்றரொன்றின் விலை 15 ரூபாவினால் குறைக்கப்படுவதோடு புதிய விலை 310 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுப்பர் டீசல் லீற்றரொன்றின் விலை 135 ரூபாவினால் குறைக்கப்படுவதோடு புதிய விலை 330 ரூபாவாகும்.

இதேவேளை, மண்ணெண்ணெய் விலையில் எவ்விதமான விலை மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எமது ஆட்சியில் ஐ.எம்.எவ்...

இதன்போது உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஊழல், மோசடி மிக்க இந்த அரசாங்கத்துடன் நாம் ஒருபோதும் இணையப் போவதில்லை. எம்மில் எவரும் இரட்டை நிலைப்பாட்டில் இல்லை. மாறாக, இரட்டை நிலைப்பாட்டுடன் இருப்பவர்கள் தாராளமாக விலகிச் செல்லலாம்

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மற்றும் பதுளையில் வெற்றிகரமாக இரு மே தினக் கூட்டங்களை நடத்தியுள்ளது.

உழைக்கும் தொழிலாளர்கள் செறிந்து வாழும் மலையகத்திலும் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாம் பதவிகளுக்காக அரசியல் செய்பவர்கள் அல்ல. எமது அரசியலின் நோக்கம் முறைமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதேயாகும்.

தற்போது ஊழல், மோசடியாளர்களே ஆட்சியமைத்துள்ளனர். அதன் காரணமாகவே உள்நாட்டுக்கு அப்பால் சென்று, வெளிநாடுகளிடம் இலஞ்சம் கோரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமக்கு ஒரு போதும் இவ்வாறான அரசாங்கத்துடன் இணையும் எண்ணமில்லை. மாறாக ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே நாம் அரசாங்கத்துக்குச் செல்வோம்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் அவரது ஆட்சி காலத்தில் இரு சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்கின்றார்.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்களுக்கான சலுகைகளை நீக்கவோ, நிவாரணங்களை வழங்காமலோ இருக்கவில்லை.

ஆனால், தற்போதைய அரசாங்கம் அவ்வாறல்ல. எனவே தான் நாணய நிதிய ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பில் நாம் பங்கேற்கவில்லை.

உலகில் முதன்மையான நாடாக இலங்கையை மாற்றுவதே எமது இலக்காகும். எனவே இன, மத, பேதமற்ற தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசாங்கம் எம்மால் அமைக்கப்படும்.

இம்முறை மே தினத்தில் எமது சபதம் யாதெனில், ராஜபக்ஷர்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தை வீழ்த்துவதேயாகும். அத்தோடு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மக்களுக்கு சாதகமானதாக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் புதுப்பிக்கப்படும்.

அரசியல் என்பது பட்டம் பதவிகளை தேடுவது அல்ல. முறைமை மாற்றத்தை நோக்கியே அரசியல் செய்கிறோம். அரச பதவிக்கு பேராசை கொண்ட மக்கள் பிரதிநிதிகள் அல்ல நாங்கள். இன்றைய அரசியல் சமூகத்தில் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்றார்.

## தவறான தீர்மானங்களால்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று (01) நடைபெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்தன, பெசில் ராஜபக்ஷ, ஆளுங்கட்சி எம்.பிக்கள் என்று பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. அங்கு மேலும் கூறியதாவது,

நாட்டு மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இருக்கின்றனர் என்பதையே எமக்கு ஆதரவாக இங்கு கூடியுள்ள மக்கள் கூட்டம் காட்டுகிறது. எமது போராட்டம் எப்போதும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவே இருக்கும். பலர் எங்களை விமர்சிக்கின்றனர். ஆனால் நாங்கள் அதைப்பற்றி கவலைப்படப்போவதில்லை.

நாங்கள் வீணாக குழப்பமடையமாட்டோம். தேவையான நேரத்தில் நாங்கள் உங்களுடன் சேர்ந்து முடிவை எடுப்போம்.

எமது ஆட்சிக்காலத்தில் நாங்கள் தொழிலாளர்களை மதித்துச் செயற்பட்டோம். அதனால்தான் நாங்கள் தேர்தல்களில் பாரிய வெற்றி பெற்றோம். கொரோனா, பொருளாதார நெருக்கடி மற்றும் தவறான தீர்மானங்களால் நாங்கள் ஆட்சியில் பாதிப்பை எதிர்கொண்டோம். ஆனாலும் அந்த தவறான தீர்மானங்களால் வந்த அனுபவங்களை பாடமாகக்கொண்டு புதிய பாதையில் பயணிக்கத் தயாராகிறோம். இந்த பாதையில் செல்லும்போது எங்களுடன் இருக்கும் தொழிற்சங்கங்களை நாங்கள் மறக்க மாட்டோம்.

கோல்பேஸ் போராட்டத்தை நடத்தியவர்கள் இன்று என்ன செய்கிறார்கள். எங்கள் மீது சேறு பூசினாலும் நாங்கள் யாரென்பது மக்களுக்குத் தெரியும். ஜனநாயகத்தை மீறி செயற்பட்டு ஆட்சியை கைப்பற்ற முடியாது. தொழிற்சங்கப் போராட்டங்களை அரசியல் நன்மைகருதி செய்யக்கூடாது. பரீட்சை வினாத்தாள்களை நிறுத்தாமல் மேற்கொள்ளும் பணிப்பகிஷ்கரிப்பால் பிள்ளைகளே பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைகளின் எதிர்காலத்தை பணயம் வைத்து பெறும் வெற்றியால் என்ன பயன்?

மக்களுக்காக ஆட்சியை பெறவும் மக்களுக்காக ஆட்சியை விடவும் நாங்கள் தயார். அதேபோல தேவையான நேரத்தில் நாங்கள் மீண்டு எழுவோம். சேறுபூசும் அரசியல் செய்யக்கூடாது. நாட்டின் எதிர்கால சந்ததிக்காக நாங்கள் செயற்பட வேண்டும் என்றார்.

## இந்த வருட இறுதிக்குள்...

மே தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (01) வெளியிட்ட காணொளி உரையில் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

நாடு கடந்த மூன்று தசாப்தங்களாக கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தது. நாடு வீழ்ச்சியில் இருந்த நேரத்தில் நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றேன். நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததோடு மக்கள் வீதிகளுக்கு இறங்கி இருந்தனர். இந்த சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பையும் பாராளுமன்றத்தையும் சிதைக்க சிலர் முயன்றனர்.

இன்று நாட்டின் பொருளாதாரம் மீண்டும் ஸ்திரத்தன்மை அடைந்துள்ளது. உணவு தட்டுப்பாடு இல்லை. மேலும் நாட்டில் ஜனநாயக அமைப்பு செயல்படுகிறது. அச்சுறுத்தல்கள் இன்றி பாராளுமன்றம் செயல்படுகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய பணியை தடையின்றி மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நான் ஜனாதிபதி பொறுப்பை ஏற்க முன்னர் ஒரு விடயத்தை பற்றி சிந்தித்தேன். சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வது அவசியம். உலக வங்கியின் உதவி தேவை. நாம் ஏழு பில்லியன் தொடர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி 2020 தேர்தல் விஞ்ஞானத்தில் அன்று நாம் குறிப்பிட்டிருந்தோம். கட்சி என்ற வகையில் நாங்கள்தான் அந்த உண்மைகளை குறிப்பிட்டோம். மற்ற அனைவரும் பொருளாதார பிரச்சினை இருப்பதை அறிந்து நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர். அதன் விளைவு என்ன? உண்மையை கூறிய ஐக்கிய தேசியக் கட்சி இறுதியாக தேசியப் பட்டியலில் விழுந்தது.

கசப்பானாலும் உண்மையை மக்களுக்கு சொல்வதே எங்களின் கொள்கையாகும். அதனால் நாங்கள் அதிலிருந்து பின்வாங்கவில்லை. 2020 மற்றும் 2021 எங்களது இலக்கு அறிவிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினை தீவிரமடைந்தபோது அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை பெறுமாறு அவருக்கு ஆலோசனை வழங்கினேன். இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தபோது எதிர்க்கட்சி ஏனைய குழுக்கள் கலந்துரையாடலை புறக்கணித்த போதும் நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சியில் இருந்து கலந்து கொண்டோம்.

எனது முயற்சி அரசியல் அல்ல. நாட்டின் பொருளாதாரத்தை முறையாக கையாள்வதும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது ஆகும். எனவே நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பலம் என்னிடம் இருப்பதாகவும் எனக்கு ஆதரவளிக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயல்பட்டு அந்த பெறுபேறுகளை அடைய முடியும் என்ற நம்பிக்கையினால் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றேன்.

அந்த நம்பிக்கை எனக்கு இருந்ததற்கு முக்கிய காரணம், 2001இல் அரசாங்கம் கவிழ்ந்தபோது பொருளாதாரத்தை மீட்டெடுத்தது மட்டுமல்ல, பொருளாதாரத்தை பலப்படுத்தவும் முடிந்தது. 2015இல் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது, பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் முதன்மை வரவு - செலவுத் திட்ட மேலாதிக்கத்தை பெறவும் வாய்ப்பு கிடைத்தது.

எனவே, இந்தப் பொருளாதார நெருக்கடியை என்னால் எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். அப்படியானால் இந்த நேரத்தில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு அரசியல் ஸ்திரத்தன்மையையும் உருவாக்குவதற்கான வாய்ப்பு எங்களுக்கு கிடைத்துள்ளது.

தற்போது பாராளுமன்றம் இயங்கி வருகிறது. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின்படி செயல்படுபவர்கள் பலர் இலங்கையில் உள்ளனர்.

எனவே இதற்கு எனக்கு உதவிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் காரணமாகவே நாம் முன்னோக்கிச் செல்ல வாய்ப்பு கிடைத்தது. கடந்த வெள்ளிக்கிழமை இந்த ஒப்பந்தம் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட்டது. இப்பொழுது நாம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

அதற்கு அவசியமான சட்டத் திட்டங்களை கொண்டு வந்து 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குள் கொண்டுவர நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் நான் அதில் திருப்தியடையவில்லை. எமக்கு இந்த பழைய பொருளாதார முறையுடன் இனியும் முன்னோக்கிச் செல்ல முடியாது. மொத்த தேசிய உற்பத்தியை ஆண்டுக்கு ஆறு வீதம் தொடக்கம் ஏழு வீதம் என்ற அளவில் விரைவாக கொண்டு வரக்கூடிய பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும்.

என்னிடம் இரண்டு எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஒருவர் டி.எஸ்.சேனநாயக்க. ஆசியாவின் இரண்டாவது வலுவான பொருளாதாரத்தை நாங்கள் கொண்டிருந்தோம். அப்போது இங்கிலாந்துக்கு கடன் கொடுக்க முடிந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கீழ் நாம் திறந்த பொருளாதாரத்துடன் முன்னேறினோம். திறந்த பொருளாதாரத்தை உருவாக்கும் இரண்டாவது பயணத்தை இலங்கை தான் தொடங்கியது. அதற்குப் பிறகுதான் சீனா அதனை நோக்கி வந்தது.

எனவே, இந்தப் பின்னணியில் இலங்கையை மீண்டும் முன்னோக்கிக்கொண்டு செல்ல வேண்டும். பொருளாதாரத்தில் யார் இறுதியாக இருப்பது என்பது குறித்து ஆப்கானிஸ்தானுடன் போட்டியிட முடியாது. எனவே நாம் முன்னோக்கி செல்ல வேண்டும்.

அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தன செய்தது போல் நாம் பல புதிய திட்டங்களை முன்னெடுத்து புதிய பொருளாதாரத்தில் இணைய வேண்டும். அப்படி செய்யாவிட்டால் நமக்கு எதிர்காலமும் இல்லை. நாம் சிந்திக்க வேண்டியது எமது எதிர்காலத்தை பற்றி அல்ல. நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்தைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். 2048 சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும்போது முன்னேறிய பொருளாதாரம் கொண்ட நாடாக நாம் மாற வேண்டும். இந்தியா அந்த இலக்கை 2047இல் வைத்துள்ளது. சீனா 2049 அந்த இலக்குகளை அடைய உழைக்கிறது. 2048ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி ஆண்டாக மாற்ற வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்காக இந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புகிறோம். அந்த புதிய பொருளாதாரம் மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரமாக இருக்க வேண்டும். சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட சிறந்த பொருளாதாரமாக இருக்க வேண்டும். பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் குறிப்பாக ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட போட்டி பொருளாதாரமாக இருக்க வேண்டும். நாங்கள் அங்கு செல்ல முயற்சிக்கிறோம். எனவே தான் அனைவரின் ஆதரவையும் கோருகிறோம்.

குறுகிய கால அரசியல் பற்றி சிந்திக்க வேண்டாம். இன்று நாளை அல்ல, 2048 பற்றி சிந்தியுங்கள். நாட்டை முன்னேற்ற வேண்டும். இன்று நாளை என நினைத்து பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். மீண்டும் பாராளுமன்றத்துக்கான மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள இந்த புதிய பாதையில் செல்ல வேண்டும். எனவே குறிப்பாக நாம் புதிதாக சிந்திப்போம். இந்த நாட்டின் பழைய அரசியல் செயல்முறையை மாற்றும் கட்சியாக நாம் மாறுவோம். அதைத்தான் நான் உங்கள் அனைவரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

சர்வதேச நாணயத்தின் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை தாண்டிச் செல்ல எண்ணியுள்ளோம். நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். நாம் முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின் நாம் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். முதலாவது நாட்டில் உள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். இது குறித்து பேச்சு நடத்துகிறோம். இந்த வருட இறுதிக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது. பெரும்பான்மை சிங்கள மக்களையும் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

இரண்டாவது இந்த நாட்டில் அரசியல் பொருளாதார முறைமையில் மாற்றம் வேண்டும் என்று இளைஞர்கள் கூறுகின்றனர். நாம் இதனை செவிமடுக்க வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக பல கட்ட நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம். பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு மேற்பார்வை குழுவுக்கு தலா ஐந்து இளைஞர்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளோம். இந்தப் பணிகளை மே மாதத்தில் பாராளுமன்றத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

கருஜெயசூரியவின் ஆலோசனைக்கமைய மக்கள் சபைகளை உருவாக்குவதற்கான சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். இந்தப் புள்ளியில் இருந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பொருளாதார முறைமையை ஏற்படுத்துவோம்.

கடந்த வாக்கெடுப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் வாக்களிப்பை புறக்கணித்தனர். திறந்த பொருளாதார முறைமையை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம்.

எனவே, வேற்றுமைகளை மறந்து முழு பாராளுமன்றமும் அரசாங்கமாக பணியாற்றுவோம் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

இனப்பிரச்சினை விடயத்தில் தூரம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகிறேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமாயின் தயவு செய்து இந்தப் பொறிமுறைக்குள் வந்து விசேடமாக பாராளுமன்றத்தில் ஒரு அரசாங்கமாக நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம்.

இடதுசாரிக் கட்சிகள் தமது கொள்கைகளுக்கு அமைய இந்த நடைமுறையை பின்பற்ற மாட்டோம் என்று கூறியுள்ளனர். தற்போது எதிர்காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். புதிய புதிய வேலைத்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். புதிய வேலை திட்டங்களுடன் அனைவரும் இணைந்து கொள்ளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

தொழிற்சங்கங்கள், ஏனைய அமைப்புகள் என அனைவரையும் இந்த வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன். புதிய வேலைத் திட்டங்கள் குறித்து அமைச்சரவையின் யோசனைகளை பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளிடம் சமர்ப்பித்து மக்கள் சபையுடன் கலந்தாலோசிப்போம். இதற்காக பரந்த இணக்கப்பாட்டை எட்ட விரும்புகிறோம்.

அப்படியாயின் எமக்கு அச்சமின்றி முன்னோக்கிச் செல்ல முடியும். இது 25 ஆண்டு வேலைத்திட்டம். இந்த 25 ஆண்டு கால வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி நாட்டை கட்டியெழுப்பி மேம்படுத்துவோம் என்று அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

# கிளிநொச்சியில் பெருமளவான மக்களுடன் சமத்துவக் கட்சியின் சமத்துவ மேதினம்





''அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்'' எனும் தொனிப்பொருளில் சமத்துவக் கட்சியின் மே தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று(01) இடம்பெற்றது. பிற்பகல் 2.30 மணிக்கு சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் மாவட்டத்தின் பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், சிவில் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (மூ.தமிழ்ச்செல்வன்)

# தேசிய வெசாக் வாரம் ஆரம்பம்

புத்தளம், சிலாபம் மாதம்பே ஸ்ரீ ரத்னசீலி விகாரையில் தேசிய வெசாக் விழாவை மே 04 மற்றும் 05ஆம் திகதிகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பௌத்த சமய, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

இன்று (02) முதல் எதிர்வரும் 8ஆம் திகதிவரை வெசாக் வாரம் அமுல்படுத்தப்படுவதாகவும் பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் பல்வேறு பின்னடைவுகளை எதிர்கொண்டுள்ளபோதிலும் இவ்வருட வெசாக் பண்டிகை வழமையை விட அர்த்தமுள்ள வகையில் கொண்டாடப்பட வேண்டும்.

சமய அலுவல்கள் அமைச்சினால் ஆண்டு முழுவதும் பல்வேறு சமய வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், பௌத்தம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் திறந்திருப்பதால், புத்தளம் மாவட்டம் போன்ற பல்வேறு தரப்பினரும் வாழும் பிரதேசத்தில் இந்த ஆண்டு வெசாக் பண்டிகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், தானசாலைகளை எவ்வாறு நடத்துவது, அவற்றை அலங்கரிப்பது, புத்தர் உருவம் மற்றும் புத்தர் உருவத்தைப் பயன்படுத்துவது என்பன தொடர்பில் ஏற்கனவே வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் சுனந்த காரியப்பெரும தெரிவித்தார். அத்துடன், பௌத்த கொடியை ஒருபோதும் அலங்காரமாக பயன்படுத்த வேண்டாம். அப்படி அலங்கரிக்க வேண்டுமென்றால் மஞ்சள் கொடியை பயன்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# சுண்ணாம்புக்கல் ஏற்றிச்சென்ற புகையிரத எஞ்சினில் தீப்பரவல்

புத்தளம், பாலாவியிலிருந்து அருவக்காளு சுண்ணாம்புக்கல் குவாரிக்கு, சுண்ணாம்பு ஏற்றிச் சென்றுகொண்டிருந்த புகையிரதத்தின் எஞ்சினில் நேற்று திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அந்த புகையிரதம் புத்தளம், குருநாகல் வீதியின் 30 நிமிடங்கள்வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால், அந்த வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததாக புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், பாலாவியிலிருந்து சீமெந்து உற்பத்திக்கான சுண்ணாம்புக்கல் எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்தில் ஈடுபடுத்தப் பட்டிருந்த அதிவேக புகையிரதத்தின் எஞ்சினே இவ்வாறு தீப்பரவலுக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகரினூடாக பயணித்துக்கொண்டிருந்த குறித்த புகையிரதத்தில் ஏற்பட்ட திடீர் தீப்பரவலை அடுத்து, புகையிரதத்தின் சாரதி விரைவாக எஞ்சினின் தொழிற்பாட்டை நிறுத்தியமையினால், தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது.

புகையிரதப் பெட்டிகள் புத்தளம், குருநாகல் வீதியின் போக்குவரத்துக்கு தடை ஏற்படும் வகையில், புத்தளம் வைத்தியசாலைக்கு அருகில் நிறுத்தப்பட்டமையினால் பிரதான வீதியை பயன்படுத்திய சாரதிகள் கடும் அசௌகரியத்தை எதிர்நோக்கியிருந்தார்கள்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 19ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுவுமே இன்று உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

**ரிஷபம்:** மனதை ஒருநிலையில் வைத்துக் கொள்ளுங்கள். புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.

**மிதுனம்:** எதிர்பாராத சில விபத்துகளில் சிக்கலாம். வீடு, வாகனம் வாங்குவதும் விற்பதும் இன்றையநாளில் கூடாது.

**கடகம்:** நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மன உறுதியுடன் அனைத்தையும் வெற்றிக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்தி ஏற்படும், உங்களால் குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகலாம்.

**கன்னி:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும், நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**துலாம்:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களை பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:** தொழில் மூலமாக பதவியுயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும், புதிய பதவிகள் வந்து சேரும்.

**மகரம்:** பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மீனம்:** கூட்டுத் தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. நீண்ட நாள் மனக்குறை தீரும்.

| | | |
|---|---|---|
| **திதி** | : | துவாதசி பி.ப.11.18 வரை பின் திரயோதசி (வளர்) |
| **நட்சத்திரம்** | : | உத்திரம் பி.ப.7.41 வரை பின் அஸ்தம் |
| **யோகம்** | : | அமிர்த சித்த யோகம் |
| **வார சூலை** | : | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : | மு.ப. 7.54 – 8.54 மணி வரை |
| **ராகு காலம்** | : | 2.54 – 4.24 மணிவரை |
| **எமகண்டம்** | : | 8.54 – 10.24 மணிவரை |
| **குளிகை** | : | 11.54 – 1.24 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : | கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | : | பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு) |
| **விசேட தினம்:** | | --------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# மனச்சாட்சி இல்லாத ஊழல் நிறைந்த சமூகமே எமது நாட்டிலுள்ளது

## மாற்றத்தை ஏற்படுத்துவதில் சமயத் தலைவர்களுக்கு முக்கிய பங்கிருப்பதாக பேராயர் ரஞ்சித் ஆண்டகை அறிவிப்பு




மனச்சாட்சி இல்லாத, சமய கட்டுப்பாடுகளற்ற ஊழல் நிறைந்த சமூகமே உருவாகியுள்ளது. எந்தவொரு அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்களால் இதனை மாற்றியமைக்க முடியாது. எனவே, நாட்டை கட்டியெழுப்புவதில் அதில் முக்கிய பங்கு சமயத் தலைவர்களுக்கு இருப்பதாக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

மொரட்டுவை தேவாலயத்தில் நேற்று (01) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் கொண்ட அநீதியான செயற்பாடுகள் ஒவ்வொரு இடங்களிலும் இடம்பெறுகின்றன. அநீதிக்கு எதிராக நாங்கள் போராட்டம் செய்ய வேண்டும். அரசியல் போராட்டம் அல்ல. அது உள்ளக போராட்டமாக இருக்க வேண்டும். எமது அனைவரினதும் வாழ்க்கையில் அது இருக்க வேண்டும்.

தர்மத்தின் அடிப்படையிலான, சகல சமயங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் நாடாக எமது நாட்டை கருதுகிறோம். கோவில், விகாரைகள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் என நாடு முழுவதும் நிறைந்துள்ளன. ஆனால், செயற்பாடுகளை பார்க்கும்போது கவலையாகவுள்ளது. காரணம், அந்த சமயத்தின்படி யாரும் வாழ்வதில்லை. தலைவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் ஊழல்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். அலுவலகமொன்றுக்குச் சென்றால் பணம் கொடுத்தால் மாத்திரமே எமது பணிகளை விரைவாக செய்துகொள்ள முடியும். இவ்வாறான சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது.

தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்வது முதல் இறுதிவரை இதனை செய்கிறார்கள். மனச்சாட்சி இல்லாத, சமய கட்டுப்பாடுகளற்ற சமூகம் உருவாகியுள்ளது. இவ்வாறு இருந்தால் ஒருபோதும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. சட்டங்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் பேசுகிறார்கள். இந்தச் சட்டத்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. சட்டத்திட்டங்கள் இருப்பதால் பயனில்லை. ஏழை மக்களுக்கே அது நெருக்கடியை ஏற்படுத்தும். பணம் இருப்பவர்களுக்கு இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படாது.

ஊழல் ஒழிப்புச் சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறுகிறார்கள். அந்தச் சட்டத்தினூடாக பணம் படைத்தவர்களை பாதுகாக்கவே முயற்சிக்கிறார்கள். இவ்வாறான ஏற்பாடுகள் நகைச்சுவைக்குரியவையாகும்.

எந்தவொரு அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்களால் இதனை செய்ய முடியாது. எனவே, இந்த இடத்தில் சமயத் தலைவர்களுக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்படுகின்றது. அதனால், மக்களின் மனதை சுத்தப்படுத்தி சிறந்த சமூகத்தை உருவாக்கினால் மாத்திரமே நாட்டை கட்டியெழுப்ப முடியும். கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நீதியான மக்கள் தோற்றம்பெற வேண்டுமெனில் தாம் பின்பற்றும் சமய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்ற வேண்டும் என்றார்.

# சஜித்துடன் தொடர்ந்து பயணிக்கத் தயாரில்லை

## பதுளையில் வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



(எஸ்.கணேசன்)

"பதுளை, மடுல்சீமை மக்களிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மன்னிப்புக்கோர வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணத்தை தொடர்வதற்கு தயாரில்லை" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மே தினக் கூட்டம் பதுளையில் நேற்று (01) நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டில் தேசிய கொள்கைத்திட்டம் பற்றி பேசப்படுகின்றது. அவ்வாறு கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும்போது மலையக பெருந்தோட்ட மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். இந்நிலைமையை இனியும் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இலங்கை பிரஜைகள்தான். அவர்களுக்கு எதற்காக ஓரவஞ்சனை காட்டப்படுகின்றது? இலங்கை மக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளும் எமது மக்களுக்கும் வேண்டும்.

எமது மக்கள் பயங்கரவாதிகள் அல்லர். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. நாட்டின் வன்முறைகளில் ஈடுபட்டதில்லை. நாடு மேம்பாட்டுக்காக உழைக்கும் எங்கள் மக்களுக்கு உண்ண உணவில்லை, பாதுகாப்பாக வாழ காணி இல்லை. மக்கள் இப்படி தவிக்கையில் எனக்கு கட்சி, சின்னம் என்பன முக்கியம் இல்லை.

தற்போதைய சூழ்நிலைக்கமைய நாட்சம்பளமாக 3 ஆயிரத்து 250 ரூபா வழங்கப்பட வேண்டும் என பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. எனவே, அந்த தொகையை வழங்குமாறு கம்பனிகளுக்கு ஜனாதிபதி கட்டளையிட வேண்டும்.

அதேவேளை, எமது மக்களை செல்லாக்காசாக கருத வேண்டாம் என எமது கட்சித் தலைவர் சஜித்திடம் கூறுகின்றேன். அவர் மடுல்சீமை கூட்டத்துக்கு வரவில்லை. ஆக, மடுல்சீமைக்கு வந்து அவர் மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும். இல்லையேல் சஜித்துடன் எனது பயணம் தொடராது" - என்றார்.

## ஊடகர் பாலியல் துன்புறுத்தல் விவகாரம்; உத்தியோகபூர்வ விசாரணைகள் ஆரம்பம்

பெண் ஊடகவியலாளர் ஒருவரை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீன தொலைக்காட்சி அதிகாரியொருவருக்கு எதிராக உத்தியோகபூர்வ விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் உத்தரவின்பேரில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன.

உள்ளக மற்றும் அமைச்சரவை மட்டத்திலான விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ள பந்துல குணவர்த்தன தான் துன்புறுத்தல்களுக்குள்ளானதாக குறிப்பிட்ட பெண் ஊடகவியலாளர் சமூக ஊடகங்களில் பதிவுசெய்துள்ளபோதிலும் அவர் உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டுகள் எவற்றையும் பதிவு செய்யவில்லை. இருந்தபோதிலும், விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை எந்த முறைப்பாடும் எனக்கு கிடைக்கவில்லை. ஊடக அமைச்சின் செயலாளருக்கோ அல்லது சுயாதீன தொலைக்காட்சி நிர்வாகத்துக்கோ இதுவரை எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர், எனினும் பெண் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஊடக அமைச்சின் செயலாளரையும் சுயாதீன தொலைக்காட்சி நிர்வாகத்தையும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.





ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)





இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மே தினக் கூட்டம் நுவரெலியாவில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: செ.திவாகரன்)




முன்னிலை சோசலிசக் கட்சியின் மே தினக் கூட்டம் நுகேகொடையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 02ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# தொழிலாளர்களை கவனிப்போம்!

மே தினக் கொண்டாட்டங்களை நேற்று நாட்டின் பல்வேறு இடங்களிலும் காண முடிந்தது. கடந்த சில வருடங்களாகவே கொரோனா தொற்று நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தொழிலாளர் தினம் கொண்டாடப்படவில்லை. அதனால் தொழிலாளர்களுக்கு பாதிப்பில்லை என்றாலும் அதை வைத்து அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகளுக்கு அந்தக் கணங்கள் இழப்புதான்.

எட்டு மணிநேர வேலை என்பது உலகில் பெருத்த சவாலுக்கு உட்பட்டிருக்கும் தருணம் இது. 137 ஆண்டுகளுக்கு முன்னர் (1886இல்) எட்டு மணிநேர வேலை கேட்டுக் கிளர்ந்து எழுந்தது போராட்டம். அன்று தொடங்கி, படிப்படியாகத் தொழிலும் தொழிலாளர் வர்க்கமும் வளர்ந்தன.

'தொழிலாளி' என்றாலே நிரந்தர வேலை, கௌரவமான ஊதியம், பணிப் பாதுகாப்பு ஆகியவை சார்ந்த நம்பிக்கை அல்லது கற்பிதங்கள் கூட உருவாயின. 1919இல் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) தொடங்கப்பட்டது. உழைக்கும் நேரத்தை முறைப்படுத்துவது தொடங்கி, சமூக நீதியை நிலைநாட்டுவதுவரை சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் முக்கியப் பங்காற்றியது. 1944இல் அமெரிக்காவின் பிலடெல்பியாவில் நடைபெற்ற ஐ.எல்.ஓ. சர்வதேச மாநாடு, தொழிலாளர் நலம் பேணுவதில் அடிப்படை விதிகளை உறுதிப்படுத்தியது.

அதன் பிறகான இந்த 80 ஆண்டுகளில், சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி, பனிப்போரின் முடிவு, இனப் பாகுபாடுகளுக்குச் சட்டரீதியான முடிவு, கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் மறைவு, பெர்லின் சுவர் தகர்ப்பு என என்னென்னவோ நடந்தேறிவிட்டன. இனப் படுகொலைகள், பயங்கரவாதம், இனவாதம், வகுப்புவாதம், வெறுப்பு அரசியல் எனப் பல நெருக்கடிகளும் அதிகரித்துள்ளன. தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் தங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துக்கூறுவது கூடப் பெரும் சவாலாக மாறிவிடுகிறது. அவற்றுக்குள் அரசியல் கலக்கப்பட்டிருப்பது அதற்கொரு காரணம். தொழில் துறையில் வேகமாக நடந்தேறும் தொழில்நுட்ப மாற்றங்கள் உள்ளிட்ட எல்லாவற்றிலும் தொழிலாளர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

உலகமய காலகட்டத்தில் என்னதான் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்று பேசப்பட்டாலும் இன்னமும் வறுமை குறைந்தபாடில்லை. தினமும் 82 கோடிக்கும் அதிகமானோர் பட்டினியோடு உறங்கச் செல்வதாக ஐக்கிய நாடுகள் சபை சொல்கிறது. ஒவ்வோர் ஆண்டும் 25 கோடி தொழிற்சாலை விபத்துகள் வழியாக 12 இலட்சம் பேர் உயிரிழப்பதாகவும் 16 கோடிப் பேர் தொழிற்சாலை பணிச்சூழல் காரணமாக நோய்வாய்ப்படவும் செய்கின்றனர் என்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் கூறுகிறது.

அடிமை முறை ஒழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் 2.7 கோடிப் பேர் அடிமைகள்போல் வாழ்ந்துவருகின்றனர். பல கோடிக் குழந்தைகள், பதின்பருவத்தினர் ஆபத்தான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். எட்டு மணிநேர வேலைச் சட்டம் அகற்றப்பட்டு வேலைப்பளு கூடினால் நிலைமை இன்னும் மோசமாகும். 'மனித நினைவுக்கு எட்டிய வகையில், 20ஆம் நூற்றாண்டே அதிக இரத்தக்கறை படிந்த நூற்றாண்டு' என ஐ.நா. முன்னாள் பொதுச்செயலாளர் கொபி அனான் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. .

உலகமய காலகட்டத்தில், Flexibilisation, Informalisation, Deregulation, Privatisation, De-unionisation ( நெகிழ்வுத்தன்மை, முறைப்படுத்தல், கட்டுப்பாடு நீக்கம், தனியார்மயமாக்கல், தொழிற்சங்க நீக்கம்) உள்ளிட்ட நவதாராளவாதச் சொல்லாடல்களும் நடைமுறைக்கு வந்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் பொருள் ஒன்றே: சந்தையே வேலையையும் கூலியையும் தீர்மானிக்கும். அரசுக்கோ தொழிற்சங்கங்களுக்கோ அங்கு வேலை இல்லை. நிறுவனங்கள் ஆட்களைப் பணிக்கு எடுத்துக்கொள்ளலாம். பணிநீக்கம் செய்யலாம்.

உலகமயமாக்கலின் விளைவாக உருவான சமச்சீரற்ற வளர்ச்சியால், ஏற்றத்தாழ்வு கண்கூடாகத் தெரிகிறது. செல்வக் குவிப்பும் இழப்பும் இயல்பானதாக மாறிவிட்டன. தொழில்நுட்ப வளர்ச்சியால் வேலைவாய்ப்பு குறைந்துள்ளது. கூலி விகிதம் குறைந்துள்ளது. பணி நிலைமைகள் பெரும் பாதிப்பை அடைந்துள்ளன. சமூகப் பாதுகாப்பின்மை அதிகரித்துவருகிறது. இழப்பீடு ஏதுமின்றி நிறுவனங்கள் மூடப்படுவது, ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படுவது வெகு இயல்பாகிவிட்டது.

தற்போதைய நிலையில் முதலீட்டாளர்களுக்கு இது நல்லதாகத் தெரிந்தாலும், இது ஆரோக்கியமான வளர்ச்சி அல்ல. சமச்சீர் வளர்ச்சிக்கும் ஏற்றதல்ல. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் நடத்திய ஓர் ஆய்வில், 84% தொழிலாளர்கள் தங்கள் நாட்டில் நடைமுறையில் உள்ள குறைந்தபட்ச ஊதியம் போதுமானதாக இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

உலகமயமாக்கல் சூழலில் உலகம் முழுமைக்குமான குறைந்தபட்ச ஊதியம் ஒன்றைப் பரிந்துரைக்க வேண்டும் என ஐ.எல்.ஓ. கூறியுள்ளது. அந்தக் குறைந்தபட்ச ஊதியமானது அந்தந்த நாடுகளின் பொருளியல் சூழலுக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற கருத்தாக்கத்தையும் அது முன்வைத்துள்ளது. வேலை என்றால் அது கௌரவத்தோடும் குறைந்தபட்ச வாழ்வாதாரத்தோடும் வாழும் வாழ்க்கையை உறுதிப்படுத்தும் நிலை உருவாக வேண்டும்.

சர்வதேச தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்ட முதல் நாளில் இருந்து இன்றுவரை தொழிலாளர்களுக்கு சரியான அந்தஸ்து வழங்கப்பட்டிருக்குமாயின் உலகளாவிய ரீதியில் வறுமைநிலையும் குறைந்திருக்கும். ஆனால், தொழிற்சங்கங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டதால் அல்லது துருவப்படுத்தப்பட்டதால் தொழிலாளர்கள் இன்னமும் தொழிலாளர்களாவே இருக்கின்றனர். நவீன உலகத்திற்கேற்ப தொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும். நவீனங்கள் அவர்களையும் ஆட்கொள்ளவேண்டும். ஆட்சியாளர்கள் அதற்குரிய திட்டங்களை வகுக்க வேண்டும். நாடும், உலகமும் அப்போதுதான் முன்னேறும்.

# கச்சதீவுக்கோர் தீர்வு காண்போம்!

**இரா.சாந்தகுமார்**




சில நாட்களுக்கு முன்னர் சென்னைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் பல்வேறு கோரிக்கைகளுடன், தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சதீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை தமிழக முதல்வர் அளித்துள்ளார்.

தங்கள் வாழ்வாதாரத்திற்காக இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாக் நீரிணை, மன்னார் வளைகுடா மற்றும் கச்சதீவு அருகே மீன் பிடித்து வருகின்றனர். இவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர், எல்லை தாண்டி தங்களின் கடற்பகுதியில் மீன் பிடிப்பதாக கூறி அவ்வப்போது தாக்குதல் நடத்துவது, வலைகளை அறுத்தெறிவது, மீன்களையும் படகுகளையும் பறிமுதல் செய்வது என்பதுடன், மீனவர்களை கைதுசெய்து சிறையில் அடைப்பதும் வாடிக்கையாகி விட்டது. கடந்த நாற்பது ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் பலர் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் கையொப்பமான இந்திய - இலங்கை ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கைக்கு 285 ஏக்கர் பரப்பளவு கொண்ட கச்சதீவு தரப்பட்டபோது, தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்தது. அதனை சமாளிக்கவே தமிழக மீனவர்கள் கச்சதீவில் தங்கள் மீன்பிடி வலைகளை உலர்த்திக் கொள்ளவும் இத்தீவில் உள்ள புனித அந்தோனியார் கோயிலில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் திருவிழாவில் பங்கேற்கவும் அனுமதிக்கப்படுவர் என இலங்கையும் இந்தியாவும் அறிவித்தன.

கச்சதீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்ட விவகாரதில் பாராளுமன்றத்தில் உரிய விவாதங்கள் நடத்தப்படவில்லை. மேலும், மாநில எல்லைகளை மறுசீரமைப்பு செய்வதற்காக அரசியல் சாசனம் வகுத்துள்ள விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. எனவே, கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்தது சட்டப்படி செல்லாதென அறிவிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு 2011ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தது. எனினும், இவ்வழக்கின் முடிவு தமிழக அரசுக்கு சாதகமாக அமையவில்லை.

தமிழக முதல்வர்களாக இருந்த கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோர் இலங்கைக்குத் தரப்பட்ட கச்சதீவைத் திரும்ப பெற இயலாத சூழ்நிலையில், அத்தீவை நீண்ட காலக் குத்தகைக்கு இந்தியா, இலங்கை அரசிடமிருந்து பெற வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தினர். கச்சதீவை நம் நாடு குத்தகைக்குப் பெற்றால் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாகக் கூறி இலங்கைக் கடற்படையினர் அத்துமீறுவது அறவே நடைபெறாது. எனினும், தமிழக முதல்வர்களின் இந்த ஆலோசனை மத்திய அரசால் தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டு செயல் வடிவம் பெறவில்லை.

கச்சதீவில் இலங்கைக் கடற்படையினர் வழிபடுவதற்கென்ற காரணத்தை முன்வைத்து அண்மையில் புத்தர் சிலையுடன் விகாரையொன்றை தற்காலிகமாக இலங்கை அரசு நிறுவியது. இத்தீவில் காலங்காலமாக புனித அந்தோனியார் ஆலயம் ஒன்று மட்டுமே வழிபாட்டுத்தலம் என்று இருந்தநிலை மாறி தற்போது நிறுவப்பட்டுள்ள புத்த விகாரையால் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் அமைத்து சிங்களமயமாக்குதலை ஏற்படுத்தும் சிங்கள அரசு, தற்போது கச்சதீவையும் சிங்களமயமாக்கலின் ஒரு பகுதியாகவே புத்த விகாரையை நிறுவியுள்ளதாகவே கருத வேண்டி உள்ளது.

ஏற்கெனவே இலங்கையிலுள்ள பெரிய துறைமுகமான கொழும்புக்கு அடுத்தபடியாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை சீனாவிற்கு 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது இலங்கை அரசு. சரக்குகளைக் கையாள்வதற்காகவே இத்துறைமுகம் என்று கூறப்பட்டாலும், ஏற்கனவே அருணாசலப் பிரதேசம் உள்ளிட்ட இந்தியாவின் வடக்கு எல்லையில் தேவையற்ற சச்சரவுகளை உருவாக்கி வரும் சீன அரசு, வருங்காலத்தில் இலங்கையில் இருந்தபடி இத்துறைமுகத்தின் மூலம் தென்னிந்தியாவிற்கு இராணுவ ரீதியான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையைப் புறந்தள்ள முடியாது.

மேலும், இலங்கையின் தென்முனையான தெய்வேந்திர முனை பகுதியில் விண்வெளித் தகவல் ஆராய்ச்சி மையம் மூலம் ரேடார் தளம் ஒன்றை நிறுவ சீனா முடிவு செய்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த ரேடார் தளத்தின் மூலம் இந்திய கடற்படைக்கு சொந்தமான போர்க் கப்பல்கள், படகுகள் ஆகியவற்றின் நடமாட்டத்தை சீனா மிகத் துல்லியமாகக் கண்காணிக்க முடியும்.

இச்சூழலில் இந்தியாவின் பாதுகாப்பை கருதி, இலங்கையில் ஆதிக்கம் செலுத்த முற்படும் சீனாவை பின்னுக்குத் தள்ளி இலங்கை அரசுடன் நெருக்கமாக உறவை மேற்கொள்ள வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு நம் நாடு மூன்றரை பில்லியன் டொலர் கடன் வழங்கியுள்ளதோடு, அரிசி, பால்மா, மருந்துகள், எரிபொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களையும் கொடுத்து உதவியுள்ளது. சமீபத்தில் அங்கு சென்ற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இலங்கையின் பொருளாதார புனரமைப்பிற்கு இந்தியாவின் ஆதரவை அறிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஆதரவான முதல் நாடாக இந்தியா சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சான்றிதழை அளித்தது. இதற்காக இலங்கை அரசும் இந்தியப் பிரதமருக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளது. ஆக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தற்போது நிலவி வரும் நெருக்கமான நட்புறவைப் பயன்படுத்தி கச்சதீவை இலங்கையிடமிருந்து திரும்பப் பெற்று அத்தீவின் மீது நம் நாட்டின் இறையாண்மையை நிலை நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.

குறைந்த பட்சம் கச்சதீவை இலங்கையிடமிருந்து குத்தகை அடிப்படையிலேனும் இந்தியா பெற முயற்சிக்க வேண்டும். இத்தகைய முயற்சி வெற்றி பெறும் நிலையில், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட்டு இந்தியா மீதான சீனாவின் இராணுவ அச்சுறுதல் தவிர்க்கப்படுவதோடு, தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதற்கும் நிரந்தரத் தீர்வும் ஏற்படும்.

*நன்றி - தினமணி*



## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1814 – முதலாவது மெதடிஸ்ட் ஆயர் தோமஸ் கோக் சமயப் பரப்புனராக கப்பலில் இங்கிலாந்திலிருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.
- 1851 – கொழும்பு நகரைச் சுற்றிய பகுதிகளில் பலத்த காற்று வீசியதில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1946 – கேகாலையில் நேவ்சுமயர் தோட்டத்தில் இந்தியத் தமிழர் குடியிருந்த 400 ஏக்கர் காணிகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன.
- 1952 – உலகின் முதலாவது ஜெட் விமானமான டி ஹாவிலண்ட் கொமெட்-1, தனது முதல் பறப்பை லண்டனிலிருந்து ஜொகான்னஸ்பேர்க் நகருக்கு மேற்கொண்டது.

# விலையேற்றத்தை கண்டித்து வவுனியாவில் ஊர்வலம்




(வவுனியா நிருபர்)

புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் பிரதான மேதினக்கூட்டமும் ஊர்வலமும் வவுனியாவில் நேற்று (01) காலை இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கடைவீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகர மண்டபத்தை அடைந்து அங்கு மேதினக் கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைத்தலைவர் பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

ஊர்வலத்தின் போது விலையேற்றம்,தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் செயற்பாடு என்பவற்றைக் கண்டித்து கோசங்கள் எழுப்பப்பட்டதுடன், ஐஎம்எப் உடன்படிக்கையை சித்தரிக்கும் ஊர்தியும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தது.

குறித்த ஊர்வலத்தில் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணம், வல்வை முத்துமாரியம்மன் ஆலய திருவிழா நேற்று முன்தினம் (30) ஆரம்பமானது. இதற்கிணங்க 05 ஆம் திகதி இரதோற்சவமும் 06 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் நிறைவடையும். மஹோற்சவ கிரியைகள் ஆலய பிரதம குரு வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ப்றொடெக்ட் சங்கத்தின் கவனயீர்ப்பு போராட்டம்




(எஸ்.கணேசன்)

ப்றொடெக்ட்" சங்கத்தின் கவனயீர்ப்புப் போராட்டம் ஹட்டனில் நேற்று (01) இடம்பெற்றது.

மே தினத்தை முன்னிட்டு முறைசாரா துறையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு திட்டத்தை உருவாக்குதல் உள்ளிட்ட மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன், மல்லியப்பு சந்தியில் மேற்படி கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.




இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேதின ஊர்வலம் பதுளை நகரில் நேற்று இடம்பெற்றது.

# கொழும்பு பிரதேசத்தில் தொடரும் மோட்டார் சைக்கிள் திருட்டு!

## சந்தேகநபர்கள் இருவர் வெள்ளவத்தையில் கைது



கொழும்பு நகரில் நீண்டகாலமாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பக்க கண்ணாடி என்பவற்றை திருடியதாகக் கூறப்படும் இருவரை வெள்ளவத்தை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 மோட்டார் சைக்கிள்கள், ஒரு முச்சக்கரவண்டி, வாகன பக்க கண்ணாடிகள் 20சோடி என்பன மீட்கப்பட்டதாகவும் வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை திருடப்படும் கண்ணாடிகளை விற்பனை செய்த பஞ்சிகாவத்தை பகுதியைச் சேர்ந்த வியாபார நிலைய உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு விசாரணைகளின் பின்னர் அவர்களை கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 35 மற்றும் 39 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட காலமாக கொழும்பு நகர பகுதிகளில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பக்க கண்ணாடிகள் என்பவற்றைத் திருடி விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை தொடர்பில் பல்வேறுபட்ட முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் சுபாஸ் காந்தவலவின் பணிப்பில் வெள்ளவத்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புபிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதர் கேசாந் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

# கொரோனா நோயாளர்கள் எழுவர் அடையாளம்

நாட்டில் அண்மைக்காலமாக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமை, நேற்று முன்தினம் (30) நாட்டில் 07 கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, இதுவரையில் அடையாளங்காணப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 72 ஆயிரத்து 171 ஆக அதிகரித்துள்ளதாக தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, எதிர்வரும் நாட்களின் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதால் சுகாதார ஆலோசனையை தொடர்ந்து பின்பற்றுமாறு சுகாதார பிரிவு கோரியுள்ளது. அத்துடன் ஏனைய சுகாதார வழிமுறைகளையும் தொடர்ந்து பின்பற்றுமாறும் கோரப்பட்டுள்ளது.

# சட்டவிரோத 836 கிலோ கிராம் பீடி இலைகளுடன் இருவர் கைது

புத்தளம் - கற்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 836 கிலோகிராமுக்கும் அதிகமான பீடி இலைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கற்பிட்டி, பராமுனை மற்றும் குடாவ கரையோர கடற்பகுதியில் நேற்று முன்தினம் (30) இரவு மற்றும் நேற்று (01) அதிகாலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளை பிரிவினரால் நேற்று இரவு பராமுனை கடற்பகுதியில் மேற் கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்துக்கிடமாக படகொன்றுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.இதன்போது குறித்த படகிலிருந்து 550 கிலோ 750 கிராம் பீடி இலைகள் கைபற்றப்பட்டுள்ளன. கற்பிட்டி, அனவாசலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 மற்றும் 23 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை குடாவ கடற்கரையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த பீடி இலைகள் அடங்கிய 9 பைகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து 286 கிலோ 200 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

# இறைவரித் திணைக்களத்துக்கு 105 சதவீத வருமானம்

நடப்பாண்டின் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தமது வரி வருமான இலக்கைத் தாண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலக்கு வருவாயை விட 105 சதவீதம் அதிகமாக வருமானம் ஈட்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். ஊறாபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# கார் விபத்தில் இருவர் உயிரிழப்பு

## ஹொரொவ்பொத்தானையில் சம்பவம்



ஹொரொவ்பொத்தானை பிரதேசத்தில் இடம்பெற்ற கார் விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ளதுடன் காரின் சாரதி பலத்த காயங்களுடன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கெபித்திகொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு விட்டு மீண்டும் ஹொரொவ்பொத்தானையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கார், ஹொரொவ்பொத்தானை – வவுனியா ஏ29 வீதியில் கிவுலகடவல பிரதேசத்தில் மாடுகள் இரண்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (30) இரவு 09.50 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் பலத்த காயங்களுடன் ஹொரொவ்பொத்தானை மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதன்போது 19 வயதுடைய இன்னுமொரு இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக ஹொரொவ்பொத்தானை பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில், அளுத்வத்தை, மரதன்கடவல இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரும் நிகவெவ, ஹொரொவ்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரொருவருமே உயிரிழந்துள்ளனர்.

காரின் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், பிரதேச மக்கள் ஹொரொவ்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஹொரொவ்பொத்தானை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன .

# கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்தி வேலி அமைப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா, கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்குட்பட்ட நீரேந்து பிரதேசத்தை கையகப் படுத்தி வேலி அமைக்கப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் (30) இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பட்டாணிச்சூர், புளியங்குளத்தின் குருமன்காட்டுக்கு அண்மித்த மன்னார் வீதி ஓரமாகவுள்ள நீரேந்து பிரதேசத்தை ஆக்கிரமித்து குறித்த சில நபர்களால் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. குறித்த நீரேந்து பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றினை அண்மித்தே குறித்த வேலி அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, குறித்த பகுதிக்கு அருகிலுள்ள பெண்ணொருவர் தனது வீட்டுக்கு அண்மித்திருந்த காணித் துண்டொன்றை வேலியிட்டு அடைத்த போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் ஜேசீபி இயந்திரத்துடன் சென்று குறித்த வேலிகளை அகற்றியதுடன், அப் பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்தனர்.

ஆனால், இரவோடு இரவாக குறித்த பகுதியில் நீரேந்து பிரதேசம் வேலியிட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போதும் உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# ரூஹானிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா



மன்னார், தாராபுரம் ரூஹானிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (29) தாராபுரம், அல்-மினா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அரபுக்கல்லூரியின் அதிபர்களான இல்ஹாம், சஹ்துல்லாஹ் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதுடன், விஷேட பேச்சாளராக அல்-ஹாபிழ் றிஸ்வி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

தாராபுரம் மண்ணின் முதலாவது பெண்கள் அரபுக் கல்லூரியான ரூஹானிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியிலிருந்து, முதன் முறையாக 13 ஆலிமாக்கள் பட்டம் பெற்று வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.04.30
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5102 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15.266.921.00
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 0 8 5 3 8 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3344 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,997,947.84
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 49 55 61 70

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1557 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,445,211.60
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 0 7 7 1 9 4

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1132 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,165,336.00
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 01 30 37 59

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 411 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,587,403.60
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 13 14 23 60 — விசேட இலக்கினம் கடகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1450 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 318,236,166.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 36 43 60 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# நுவரெலியாவில் தொடரும் அடைமழை; விவசாயக் காணிகள் வெள்ளத்தால் பாதிப்பு





(ஆ. ரமேஸ், எஸ்.கணேசன்)

நுவரெலியா மாவட்டத்தில் பிற்பகல் வேளையில் பெய்துவரும் அடைமழை காரணமாக வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் நிறைந்துள்ளதாலும் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா – கந்தப்பளை பகுதிகளில் கடும் மழை காரணமாக பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய காணிகள் மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்தோடு, தோட்டங்களை அண்டிய வீடுகளுக்கும் வெள்ள நீர் புகுந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

மேலும், மழை காரணமாக நுவரெலியா - உடபுஸ்ஸலாவ பிரதான வீதியின் போக்குவரத்தும் சில மணித்தியாலங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன முறுகலை தடுக்க விசேட கலந்துரையாடல்



(கண்டி செய்தியாளர்)

கண்டி சர்வமத அமைப்பு, கண்டி டெவோன் ஹோட்டலில் நடத்திய மாதாந்த அமர்வில் எதிர் காலத்தில் இன முறுகள் ஏற்படாதவாறு எவ்வாறு முன் எச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொள்வது என்பது தொடர்பில் நேற்றுமுன்தினம் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் இனங்களுக்கு இடையில் விரிசல் ஏற்படுத்தும் நிகழ்ச்சி நிரல்களை தீய சக்திகள் மேற்கொள்ளலாம். அவ்வாறு மேற்கொண்டால் அதனை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் ஆராய்ந்தது.

கண்டி மாவட்ட அரச அதிபராகவும் மற்றும் பல்வேறு அரச திணைக்களங்கள், அமைச்சுகள் போன்றவற்றில் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவரும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் தலைவருமான எஸ்.பி.பொல்கொல்ல தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# 58ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடிய தொ.தே.சங்கம்





(எஸ்.கணேசன்)

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் நேற்று தனது 59 ஆவது ஆண்டில் காலடி வைத்தது. தொழிலாளர் தேசிய சங்கமானது 1965ஆம் ஆண்டு மே முதலாம் திகதி மலையக தொழிற்சங்க துறவியென போற்றப்படும் வெள்ளையனால் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றே அச்சங்கம் உருவாக்கப்பட்டது. சி.வி. வேலுபிள்ளை உட்பட பல முக்கிய பிரமுகர்கள் மேற்படி சங்கத்தில் அங்கம் வகித்தனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்துக்கு தற்போது பழனி திகாம்பரம் தலைமை வகிக்கின்றார். தொழிலாளர் தேசிய சங்கம் அதன் அரசியல் கிளையாக செயற்படுகின்றது. தற்போது இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்நிலையில் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், மே தினத்தை முன்னிட்டும் ஹட்டனில் சிவசுப்பிரமணிய ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதன்பின்னர் கட்சி தலைமையகத்தில் கட்சி கொடி ஏற்றப்பட்டு, கேக் வெட்டி கொண்டாடினர்.

இந்நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் பிலிப், நிதிச் செயலாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன், இளைஞர் அணித் தலைவர் பா.சிவநேசன், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# விசாரணைகள் ஆரம்பம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த் தேக்கத்திலிருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொத்மலை நீர்த் தேக்கத்தில் சடலமொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் குறித்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா அல்லது நீர்த் தேக்கத்தில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்த்தேக்கத்தில் எரிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

எனினும் சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஹட்டன் தலைமை காரியாலயத்தில் இ.தொ.கா. மே தின நிகழ்வுகள்





(எஸ்.கணேசன்)

மலையக பெருந்தோட்டப்பகுதிகளை சுற்றியுள்ள முக்கிய நகரங்களில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அலுவலகங்களிலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தவர்கள் அமைந்துள்ள தோட்டங்களிலும் மேதின நிகழ்வுகள் நடைபெற்றன.

ஹட்டனில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர்களான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் புகைப்படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி பொதுச் செயலாளர் அர்ஜூன் ஜெயராஜ், உறுப்பினர் தயாளன் குமாரசுவாமி, ஹட்டன் டிக்கோயா நகரசபை முன்னாள் தலைவர் சடையன் பாலச்சந்திரன், தவிசாளர் எம்.ராமேஷ்வரனின் பிரத்தியேக செயலாளர் ராஜன், காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வட மாகாண வர்த்தக ஊழியர் சங்கத்தின் மே தினப் பேரணி யாழில்









(யாழ். நிருபர்)

வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினத்தில் வாகன ஊர்வலமொன்று யாழ். நகரில் நடைபெற்றது.

இதன்போது மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவப்புக் கொடியை கட்டியவாறு ஊர்வலம் இடம்பெற்றது.

மே தினத்தை முன்னிட்டு நேற்று (01) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து மோட்டார் வாகன ஊர்வலம் ஆரம்பித்து யாழ்ப் பாணம் கஸ்தூரியார் வீதியில் நிறைவுபெற்றது.

உலகம் முழுவதும் மே தினம் உழைப்பாளர்கள் உரிமைக்காக கொண்டாடப்படுகின்ற நிலையில், அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊர்வலம் இடம்பெற்றது.

இதற்காக பெருமளவு பொலிஸாரும் போக்கு வரத்துப் பொலிஸாரும் வீதிகளில் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும் குறைந்தளவானவர்களே ஊர்வலத்தில் பங்கேற்றிருந்தனர்.

# அல்லப்பிட்டியில் சட்டவிரோத மீன்பிடிப் பொருட்கள் மீட்பு





யாழ்ப்பாணம், அல்லப்பிட்டி பிரதேசத்தில் கடற்படையினரால் நேற்று முன்தினம் (30) முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது, அந்தப் பிரதேசத்தில் சூட்சுமமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த 50 வெடிபொருட்களுடனான 15 மின் இணைக்கப்படாத டெட்டர்னேட்டர்கள் மற்றும் 172 சென்றிமீற்றர் நீளம் கொண்ட பாதுகாப்பு உருக்கி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

வெடிபொருட்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் கடல் சூழல் பிரிவுக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்காக கடற்படை தொடர்ச்சியான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

அதற்கமையவே, இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டவிரோதமாக வெடிபொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காகவே இந்த வணிக வெடிபொருளை இவ்வாறு மறைத்து வைத்திருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் இந்த வெடிபொருட்கள் தொகையை அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக எடுத்துக்கொள்ளும்வரை கடற்படையின் பொறுப்பில் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பளுதூக்கல் வீரருக்கு கலை மன்றத்தினால் கௌரவம்

(சாவகச்சேரி நிருபர்)

பளுதூக்கல் போட்டிகள் மூலம் சர்வதேச ரீதியாக தென்மராட்சி மண்ணுக்குப் பெருமைகளைத் தேடித்தந்த ச.பூசாந்தனை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி-பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தில் இடம்பெற்றது.

கலை மன்றத்தின் 45ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் ஓர் அங்கமாக சாவகச்சேரியைச் சேர்ந்த பளுதூக்கல் வீரர் பூசாந்தன் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது கருக்குவாச்சி ஆலய முன்றலில் இருந்து மங்கல வாத்திய இசையுடன் விழா நாயகன் அழைத்து வரப்பட்டு சித்திவிநாயகர் கலை அரங்கத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டிருந்தார்.

விழா நாயகனுக்கான வாழ்த்துரையினை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் ஆற்றியிருந்தார்.



# கோப்பாயில் வாகனத் திருத்தகத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியிலுள்ள வாகனத் திருத்தகத்தில் நேற்று முன்தினம் (30) ஞாயிற்றுக்கிழமை வேலை செய்த நபர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆத்திச்சூடி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா சுஜிதரன் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வாகனத் திருத்தகத்தில் வேலை செய்யும் இந்நபர் மின்சாரத்தைப் பயன்படுத்தி (வெல்டிங் வேர்க்) ஒட்டு வேலைகளை செய்துகொண்டிருந்தவேளை மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.



சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# செயற்கை நுண்ணறிவில் கவனம் செலுத்தி முதலீடு செய்ய வேண்டும்






நாட்டில் செயற்கை நுண்ணறிவு பாவனையை ஊக்குவிப்பதற்காக துறைசார் நிபுணர்கள் அடங்கிய ஜனாதிபதி செயலணியொன்றை பெயரிட்டு அவர்களின் விபரங்களை சமர்ப்பிக்குமாறும் அது தொடர்பான கோட்பாட்டு ஆவணமொன்றை தயாரிக்குமாறும் தொழில்நுட்ப அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார். விவசாயம், கல்வி, சுகாதாரம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட பல துறைகளில் மேலும் அபிவிருத்திக்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்து அதிகாரிகளின் கவனத்துக்கு ஜனாதிபதி கொண்டு வந்தார்.

தற்போது இலங்கையில் கணனி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மூலம் மொத்த தேசிய வருமானத்தில் வருடாந்த பங்களிப்பு சுமார் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் இதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் ஈட்டப்படும் வருமானம் எவ்வளவு என அறியப்படவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அந்த தொகையை கண்டறிவதற்கான முறைமை ஒன்றை தயாரிக்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

அடுத்த சில ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படும் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில், விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையின் நவீனமயமாக்கல், சுற்றுலாத் துறை, விநியோக மையங்களை மேம்படுத்துதல் போன்ற நமது பொருளாதார சீர்திருத்தங்களுடன் அவசரமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தவிர நாங்கள் தொழில்நுட்ப துறையில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

இன்று உலகம் செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறிவரும் நிலையில் இலங்கையும் செயற்கை நுண்ணறிவில் அதிக கவனம் செலுத்தி அதிக முதலீடு செய்ய வேண்டும். இதனை தனியார் துறை ஊடாகவே மேற்கொள்ள வேண்டும். இந்தத் திட்டங்களை எவ்வாறு தொடங்குவது? அதன் சாதக பாதகங்கள் என்ன? என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும்.

அடுத்த ஆண்டு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்காக ஒரு பில்லியன் ரூபாவைஒதுக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. நாட்டில் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியில் அதற்கு ஏற்ற சூழல் தேவை. அதற்காக தனியான ஒரு நிறுவனமும் தரவுகளும் தேவை. எனவே இந்த திட்டங்களை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த உங்கள் கருத்துக்களைப் பெற எதிர்பார்க்கிறேன்.

மேலும் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். எதிர்வரும் மாதங்களில் நாம் அதற்காக அதிக முயற்சி எடுக்க வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை அரசு ஏற்கனவே தயாரித்துள்ளது.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்குள் 2500 பொறியியலாளர்கள் மட்டுமே உருவாக்கப்படுகின்றனர். குறைந்தபட்சம் 10000 பொறியியலாளர்களை இலக்காகக் கொள்ள வேண்டும் என்று நான் பரிந்துரைத்துள்ளேன். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதில் சிங்கப்பூரையும் இந்தியாவையும் கருத்தில் கொள்ள வேண்டும். கிழக்கு ஆசியா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் சீனா செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறி வருகின்றன. என்றாலும் மேற்கு ஆசியா இதுவரை அந்த இடத்துக்கு வரவில்லை. எனவே எங்களிடம் இன்னும் தெளிவான துறைகள் உள்ளன. அதற்கு நாம் மூலோபாயங்களை வகுத்து இந்த திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும். இந்த நோக்கத்துக்காக பல்கலைக்கழக ஆராய்ச்சி துறைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மற்றும் அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தன ஆகியோர் செயற்கை நுண்ணறிவை இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலின் பரந்த பரப்பில் எவ்வாறு இணைப்பது என்பது குறித்து தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் இத்துறையின் புதிய போக்குகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இத்துறையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடலில் கலந்துகொண்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் மூலோபாய விவகாரங்களுக்கான சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன ,இலங்கை செயற்கை நுண்ணறிவு சங்கம், பல்கலைக்கழகங்கள் ,தேசிய புத்தாக்க நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் தகவல் தொழிநுட்ப துறை நிபுணர்கள் ஆகியோர் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ஹட்டனில் பெருந்தோட்ட சேவை சங்கத்தின் மே தின பேரணி





(மனூர சுதத்செல்ஹேவா)

இலங்கை பெருந்தோட்ட சேவை சங்கத்தின் மே தின பேரணி நேற்று (01) ஹட்டன் நகரில் இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவர் நிஷாந்த வன்னி ஆராச்சி, செயலாளர் ரொபட் பிரான்ஸிஸ் ஆகியோரின் தலைமையில் இந்த மேதின பேரணி இடம்பெற்றது.

வாழ்க்கைச் சுமையை குறைத்தல், காணி உரிமையை பெற்றுக்கொடுத்தல், செலவுக்கு ஏற்ற கொடுப்பனவை செலுத்துதல், உரிமைகளை பாதுகாத்தல், தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த பேரணி இடம்பெற்றிருந்தது.

இலங்கை பெருந்தோட்ட சேவை சங்கத்தின் 12 சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஊழியர்கள் இப்பேரணியில் ஒன்றிணைந்திருந்ததாக சங்கத்தின் பொருளாளர் சுதாகரன் மாரிமுத்து தெரிவித்தார்.

# அமரர் ரணசிங்க பிரேமதாசவின் சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு








(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே, ஏ.எஸ்.எம்.ஜாவித், நசார்)

அமரர் ரணசிங்க பிரேமதாசவின் 30ஆவது சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப் பட்டது. முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் கொழும்பு 12, சுச்சரித்த சதுக்கத்தில் உள்ள அன்னாரது உருவச் சிலைக்கு அருகில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது திருமதி பிரேமதாச, திருமதி சஜித் பிரேமதாச உள்ளிட்ட அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மிகவும் எளிமையான முறையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரார்த்தனைகள் இடம் பெற்றதுடன் இரண்டு நிமிடநேர மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

இதன்போது சஜித் பிரேமதாசவின் விசேட உரையும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கொழும்பு மாநகர சபையின் முதல்வர் வேட்பாளருமான முஜிபுர் ரஹ்மான் மற்றும் பிரேமதாசவின் பேரன் ஆகியோர் மறைந்த ஜனாதிபதியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அனுவித்ததுடன் ஹேமா பிரேமதாச, சஜித் பிரேமதாச, திருமதி சஜித் பிரேமதாச உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் உருவச் சிலைக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# நவீன விஞ்ஞான தகவல் தொழில்நுட்பத்தில் முஸ்லிம்கள் உன்னத நிலையை அடைய வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்





(பேருவளை பீ.எம். முக்தார்)

நவீன விஞ்ஞான மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் முஸ்லிம் சமூகம் உன்னத நிலையை அடைய வேண்டும். இத்துறைகளின் உச்ச பயன்பாட்டின் மூலமே எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வியை சிறப்பாக பெற்றுக் கொடுப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்ப துறையில் துறைசார் நிபுணர்களை உருவாக்க வாய்ப்பு கிட்டுகிறது என்றும் கூறினார்.

பேருவளை, மருதானை அல் பாஸிய்யத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மர்ஹூமா எம்.என். ஸீனத் நைமா அமீன் ஞாபகார்த்த கணனி பயிற்சி கூடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மர்ஹூமா எம்.என். ஸீனத் நைமா அமீன் ஆசிரியையின் கணவர் ஏ.ஐ.எம்.ஜீ. அமீன், பிள்ளைகளான இஜாஸ் பக்ஹி பருஜ் அமீன்,எம்.ஜீ.ஏ.எம்.பஸ்ரி அமீன்,எம்.ஜீ.ஏ.எம்.பிராஸ் அமீன், எம்.ஜீ.ஏ.எம். பர்ஹத் அமீன்,எம்.ஜீ.ஏ.எம். பத்ஹி அமீன்,எம்.ஜீ.ஏ.பாத்திமா ஆயிஷா ஆகியோரின் நிதி உதவியுடன் சுமார் 35இலட்சம் ரூபா செலவில் குறித்த கணனிகூடம் அமைக்கப்பட்டது.

அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் மௌலவி மொஹம்மத் ரஸ்மி துஆப் பிரார்த்தனை நடத்தினார்.

இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எம்.பி. மேலும் கூறியதாவது,பேருவளை பகுதி மாணவர்களின் அறிவுக் கண்களை திறக்க மர்ஹூமா ஸீனத் நைமா அமீன் ஆசிரியை கடந்த மூன்று தசாப்த காலமாக ஆற்றிய தியாமிகு பணிகள் மகத்தானவை.

இன்று அவரின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் கணனி கூட மொன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர். இது ஒரு முன்மாதிரியான பணியாகும். கணனி கூடத்தை அமைத்துக் கொடுத்தது மட்டுமல்லாமல் பயிற்சி ஆசிரியர் மற்றும் அதன் பராமரிப்பையும் குடும்பத்தினர் பொறுப்பேற்க முன் வந்துள்ளனர்.

இவ்வாறான பணிகளை வசதி படைத்த பரோபகாரிகள் இறையடி சேர்ந்த தமது குடும்ப உறுப்பினர்களின் ஞாபகார்த்தமாக மேற் கொள்ள வேண்டும். கல்விக்காக முதலீடு செய்யும் பணம் ஒரு போதும் வீண்போகாது.

எமது மாணவச் செல்வங்களிடம் சிறந்த சிந்தனை திறமை, ஆற்றல்கள் இருப்பதை நாங்கள் காண்கின்றோம். அவர்களுக்கு சிறந்த கல்வி, வழிகாட்டல் மற்றும் சிறந்த பயிற்சி வழங்குவதன் மூலம் அவர்களை துறை சார் நிபுணத்துவம் பெற்றவர்களாக மாற்றமுடியும்.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் போன்று நிருவாக சேவை, சிவில் சேவை,தகவல் தொழில்நுட்ப துறைகளில் மேலும் துறைசார் நிபுணர்கள் முஸ்லிம் சமூகத்திலிருந்து உருவாக வேண்டும்.

இஸ்லாம் கல்விக்கு முன்னுரிமை அளித்த மார்க்கமாகும். கல்வி கற்போருக்கு உதவி செய்ய வேண்டும். கல்வி என்றும் அழியாத செல்வமாகும். பேருவளை அப்ரார் கல்வி அபிவிருத்தி நிலையம் இப் பிரதேச வறிய மாணவர்களுக்காக புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது.

இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான இப் பாடசாலை கல்வி உட்பட ஏனைய துறைகளில் வீறு நடை போடுகிறது. சிறந்த ஆளுமையுள்ள அதிபரின் சிறந்த நிர்வாகத்தின் கீழ் எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றம் காண வேண்டும்.மருதானையை சேர்ந்த மர்ஹூம் நைம் ,பாக்கிர் மாக்கார் குடும்பங்களுக்கிடையிலான உறவு நீண்ட காலமாக இருந்து வருகிறது என்றார்.

களுத்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ.ஜீ.எம். முதிதா உரையாற்றுகையில்,

அரசாங்கம் செய்ய வேண்டிய ஒரு சேவையை இப் பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றி இறையடி சேர்ந்த ஆசிரியையின் குடும்ப அங்கத்தவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். இதனையிட்டு அக்குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அத்துடன் சிறந்த ஒரு அதிபரின் கீழ் இப்பாடசாலை சிறப்பாக இயங்குவதையும் பாராட்டுகிறேன் என்றார்.

முன்னாள் பிரதி அதிபர் பாயிஸா ஜாபிர் உரையாற்றுகையில்,

மர்ஹூமா என்.எம். ஸீனத் நைமா அமீன் ஆசிரியை சுமார் 30 வருடங்களாக ஆசிரியர் பணியை திருப்தியான முறையில் செய்தார். அவர் ஆற்றிய பணிகளை ஒருபோதும் மறக்க முடியாது. தனது ஊர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தியாகத்துடன் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றி அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றார். ஆசிரியர் சேவையில் இருக்கும் போதே அவர் இறையடி சேர்ந்தார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் ஆற்றிய பணிகளை அல்லாஹ் அங்கீகரிக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப்போம் என்றார்.

அதிபர் மஸ்னவியா ரிப்கான் பாடசாலையின் முக்கிய குறைபாடுகள் தேவைகள் பற்றி இதன்போது எடுத்துக் கூறினார்.மர்ஹூமா எம்.என். ஸீனத் நைமா அமீன் ஆசிரியையின் புதல்வர் பரூஜ் அமீன்,பாடசாலை ஆசிரியர் முஹம்மத் இஹ்ஸான் உட்பட பலரும் இங்கு உரை நிகழ்த்தினர்.

இவ் வைபவத்தில் பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் தில்ஷாத் அன்வர்,ஏ.ஐ.எம்.ஜீ. அமீன், இரத்தினக் கல் வர்த்தகர் நபாத் நயீம், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயளாலர் மொஹம்மத் பாஹிம் ஸியாத், உறுப்பினர்களான மொஹம்மத் ரிஸ்கான்,அப்துல் ஹமீத்,மொஹம்மத் இல்ஹாம் முஸம்மில், மொஹம்மத் ரிஸ்மி பக்கிர், மொஹம்மத் இம்ரான் நஸீர் , மொஹம்மத் ரைஸ் ரியால் உட்பட பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள்,பெற்றோர், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலக குழுத் தலைவரை இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடு

மனைவியைத் தாக்கிய குற்றச்சாட்டில் பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழுத் தலைவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான கொனகோவில் குடு அஞ்சு என அழைக்கப்படும் சின்ஹார அமல் ஷமின் டி சில்வாவை நாட்டுக்கு அழைத்துவர சர்வதேச பொலிஸாருடன் இலங்கை பொலிஸார் கலந்துரையாடியுள்ளனர்.

குடு அஞ்சு பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச பொலிஸார் இலங்கைக்கு அறிவித்துள்ளனர்.

குடு அஞ்சு அரசியல் தஞ்சம் கோரி பிரான்ஸ் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பல வருடங்களாக தனது மனைவி மற்றும் குழந்தையுடன் பிரான்ஸில் தங்கியிருந்த குடு அஞ்சு கடந்த வாரம் பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது மனைவி அளித்த புகாரின் அடிப்படையில் அவர் கைதாகியுள்ளார்.

குடு அஞ்சு தனது மனைவியை விட்டு பிரிந்து பிரான்ஸ் பெண்ணை மறுமணம் செய்து கொள்ள திட்டமிட்டிருந்துள்ளார். இதனால் கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இந்த தாக்குதல் நடந்ததாக தெரியவருகின்றது.

குடு அஞ்சுவை கைது செய்து வெளிநாட்டு கடவுச்சீட்டை சரிபார்த்த போது அவருக்கு எதிராக இன்டர்போல் சிவப்பு நோட்டீஸ் அனுப்பியிருப்பது பிரான்ஸ் காவல்துறையினருக்கு தெரியவந்தது.

ஆதாரங்களின்படி குடு அஞ்சுவுக்கு எதிரான சிவப்பு நோட்டீஸ் குறித்து அவரது மனைவி பிரான்ஸ் பொலிஸாருக்கு தகவல் அளித்தார்.

குடு அஞ்சு அரசியல் தஞ்சம் கோரியதாகவும் தனது சகோதரரின் கொலையை குறிப்பிட்டு இலங்கைப் பொலிஸார் அவரைக் கொல்லத் திட்டமிடுவதாகவும் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மூன்று வருடங்களுக்கும் மேலாக பிரான்ஸில் தங்கியிருந்த அஞ்சு,இங்குள்ள தனது நண்பர்களை பயன்படுத்தி கொலைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றை பாரியளவில் மேற்கொண்டு வந்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு இரத்மலானையில் கிரிக்கெட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் தந்தையான பொதுஜன பெரமுனவின் தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினர் ரஞ்சன் டி சில்வா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் குடு அஞ்சு இருந்ததாக கூறப்படுகிறது.

அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர், இவருக்கும் அவரது நண்பர்கள் சிலருக்கும் சொந்தமான பல சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுதவிர அவரது நெருங்கிய உறவினர்கள் சிலரது சொத்துக்களை முடக்கும் நடவடிக்கையை சமீபத்தில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு மேற்கொண்டது.

கடந்த மார்ச் 30ஆம் திகதி உண்டியல் முறை மூலம் அஞ்சுவின் போதைப்பொருள் பணத்தை அனுப்பிய நபரை சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவு கைது செய்தது.

விசாரணையில் அஞ்சு கடந்த காலங்களில் போதைப்பொருள் கடத்தல் மூலம் 4000 மில்லியன் ரூபாய்க்கு மேல் வசூலித்தது தெரியவந்தது. அதிகாரிகளிடம் உள்ள அனைத்து தகவல்களையும் பயன்படுத்தி அவரை நாடு கடத்த பிரான்ஸ் அதிகாரிகள் சம்மதிப்பார்கள் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.





தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் மட்டக்களப்பு க஌தாவளை பொது மைதானத்தில் நடத்தப்பட்ட சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகள். (மட்டக்களப்பு செய்தியாளர்)

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்







(கல்லடி செய்தியாளர்)

தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் இலங்கை பொலிஸ், இராணுவம், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து நடத்திய 'சித்திரை வசந்தம் - 2023' மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும், மாலை நேர இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நுழைவாயில் வரையிலான தோணி ஓட்டம், நீச்சல் அஞ்சல் ஓட்டம் (கலப்பு), வழுக்கு மரம் ஏறுதல், கிடுகு இழைத்தல், கோலம் போடுதல், யானைக்கு கண் வைத்தல், சாக்கோட்டம், பெண்களுக்கான தேங்காய் துருவுதல் உள்ளிட்ட போட்டிகளும் இடம்பெற்றன.

அத்தோடு உள்ளூர் வியாபார முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் பிரதம அதிதிகளினால் திறந்துவைக்கப்பட்டது. இதில் பாரம்பரிய உணவுக் கூடங்கள் மற்றும் உள்ளூர் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்கள் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன.

இதன்போது இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.மகேசன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்களான சீ.புண்ணியமூர்த்தி, எம்.உதயகுமார், 231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் கொமாண்டர் திலீப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உஜித் என்.பீ.லியனகே, உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.கே.பண்டார, பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி சரத்சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்ஜினி முகுந்தன் (காணி), மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழக பிரதிநிதிகள், வர்த்தகப் பிரதிநிதிகள், கோட்டமுனை விளையாட்டுக் கழக பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கிழக்கு தாதிய உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை



(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

கிழக்கு மாகாண தாதிய உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கடந்த 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெற்றது.

தாதிய பணிப்பாளர் (மருத்துவ சேவை) எம்.பி.சீ. சமன்மலியின் வழிகாட்டலில் தாதிய பரிபாலகர் பீ.ரீ.நௌபர் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் தலைமையில் இப்பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வளவாளர்களாக கராப்பிட்டிய வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் பத்மா கமகே, மட்டக்களப்பு வைத்தியசாலை அவசர சேவை வைத்திய நிபுணர் ராஜவர்மன், பொது சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் றிப்ஷான் ஜெமீல், திருக்கோவில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எ.பி.மசூத், தாதிய உத்தியோகத்தர் ஏ.மசூத் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தினர். இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்ட அனைத்து தாதிய உத்தியோகத்தர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com



சாய்ந்தமருது தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்று வரும் மழ்ஹருல் உலமுத்தீனியா மத்ரஸாவில் மார்க்க கல்வியை பயிலும் மாணவ, மாணவிகளுக்கான குர்ஆன் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வு பிறீடம் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினர்கள், தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)





பெரியநீலாவணை பொலிஸ் நிலையம், பொலிஸ் நிலையத்தின் ஆலோசனை குழு மற்றும் சமூக பாதுகாப்பு பொலிஸ் குழுக்கள் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தமிழ், சிங்கள சித்திரைப் புதுவருட பாரம்பரிய விளையாட்டு விழா பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜி.துஷார திலங்க ஜெயலால் தலைமையில் பொலிஸ் நிலைய வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை(30) இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்நாயக்க கலந்து கொண்டதுடன் கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.டி.எம்.எல்.புத்திக உள்ளிட்ட பொதுமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தலையணை சமர், பனிஸ் சாப்பிடுதல், முட்டி உடைத்தல், சாக்கோட்டம், ஊசியில் நூல் கோர்த்தல் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (பெரியநீலாவணை செய்தியாளர்)

# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு




(மாளிகைக்காடு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட மூவின பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர்கள் தலைமையில் இடம்பெற்றது.



பாடசாலைகளில் அதிகஷ்ட, தொழில் வாய்ப்பற்று வாழும் மட்/மம/ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கடுவத்மடு தர்மபால ஜூனியர் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மட்/ககு/புணானை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் மற்றும் குடைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது பாடசாலை அதிபர்களான எஸ்.விக்ரமன், எம்.எஸ்.எம். ரிஸ்மின், ஐ.பி.எஸ்.என்.குணசேகர மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் எல்.கஜரூபன் உட்பட அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




கல்முனை அல்- அஸ்ஹர் வித்தியாலயத்தில் தரம் 01க்கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா அண்மையில்(26) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. "செயற்பாட்டு அடிப்படையிலான வாய் மொழிமூல ஆங்கிலம்" எனும் தொனிப்பொருளில் பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். (மாளிகைக்காடு செய்தியாளர்)

## அரசின் தவறான பொருளாதாரக்கொள்கையினால் கையேந்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்

### கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைரெத்தினம்

(எருவில் செய்தியாளர்)

இலங்கையைப் பொறுத்தவரையில் தொழிலாளர் வர்க்கங்களில் இன்னும் பல தேவைகளை இலங்கை அரசு பூர்த்தி செய்யவில்லை. தற்சமயம் உள்ள சூழ்நிலையில் ஒட்டு மொத்த தொழிலாளர்களும் இலங்கை அரசின் தவறான பொருளாதாரக்கொள்கை காரணமாக மிகவும் பாதிப்படைந்து தங்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெத்தினம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பு பணிமனையில் நேற்று திங்கட்கிழமை(01) இடம்பெற்ற தொழிலாளர் தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தொழிற்றுறை சார்ந்தோர் இலங்கை அரசின் பொருளாதாரக் கொள்கை காரணமாக பணவீக்கம், பொருளாதாரச்சுமை, பொருட்களுக்கான விலையேற்றம் போன்றவற்றுக்கு முகம்கொடுத்து மே தினத்தைக் கூட கொண்டாட முடியாத மனநிலையில் உள்ளனர்.

இலங்கை அரசின் ஜனநாயகமறுப்பு, ஊழல்மோசடி, மனித உரிமை மீறல்கள் போன்ற செயற்பாடுகளால் ஒவ்வொரு தொழிலாளர்களையும் கடனாளிகளாக மாற்றி தனக்கே உணவில்லாமல் இலங்கை அரசின் கடனைக் கட்டவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலும், இயற்கை வளங்களை இல்லாமலாக்கி ஒருசில முதலாளிகள் மட்டும் உழைக்கும் வர்க்கமாக மாறி அரசுக்கு கட்டவேண்டிய கோடிக்கணக்கான வரிகளையும் தனிநபர்களே சுரண்டி ஏழைத் தொழிலாளர்களை பட்டினிச் சாவில் இந்த அரசு கொண்டுவந்து நிறுத்தியுள்ளது.

எனவே, இத் தொழிலாளர் தினத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மீனவர்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும், முன்பள்ளி ஆசிரியர்களை ஆசிரியர் திட்டத்தின் கீழ் உள்வாங்கி மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட இன்னோரன்ன பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும். மேலும் அரைகுறையில் உள்ள வீடுகளை பூர்த்தி செய்வதற்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நிதிகளை ஒதுக்க ஆவன செய்ய வேண்டும்.

எனவே, மேதின இந்நாளில் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்தது போல் தொழில்நலன் சார்ந்த அமைப்புகள், தொழில்நலன் சார்ந்த அரசியற்கட்சிகள், ஒடுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதி பூணவேண்டும் என்றார்.

# திருமலையில் நான்கு மாதங்களில் 4300 டெங்கு நோயாளர்கள்

## கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர்

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாணத்தில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 4300 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் ஏப்ரல் மாதத்தில் இருவர் இந்நோயினால் உயிரிழந்துள்ளதாகவும் கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் எஸ்.அருள்குமரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய் பரவல் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டெங்கு நோய் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் ஒருவரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருவரும் ஏப்ரல் மாதம் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணத்தில் இவ்வருடம் முதல் நான்கு மாதங்களில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் 1800க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் ஏப்ரல் மாதம் மாத்திரம் 600 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் மார்ச் மாதம் 600க்கும் மேற்பட்ட நோயாளர்களும் ஏப்ரல் மாதத்தில் 700க்கும் மேற்பட்ட நோயாளர்களும் இனங் காணப்பட்டுள்ளதுடன் திருகோணமலை நகரம், உப்புவெளி மற்றும் குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.

அத்துடன் டெங்கு குடம்பிகளை அழிப்பதற்காக கிணறுகளில் மீன் குஞ்சுகளும் இடப்படுகின்றன. தேவையானவர்கள் மீன் குஞ்சுகளை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான பயிற்சிப் பட்டறை



(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் முதலுதவி நிலையத்தின் ஏற்பாட்டில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பாக சிவில் அமைப்புகள் மற்றும் சமூக இயக்கங்களை தெளிவுபடுத்தும் பயிற்சிப் பட்டறை ஞாயிற்றுக்கிழமை(30) கந்தளாய் லேக் ப்ரோன்ட் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலங்களின் சிறப்பியல்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டன.

'உயிர்க்கான உரிமை' மனித உரிமைகள் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிலிப் திசாநாயக்க மற்றும் உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பின் செயலாளர் துலான் தசநாயக்க ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தின் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அசாதாரண சூழலை கருத்திற்கொண்டு தீர்வொன்றை பெற போராட வேண்டும்

## கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க செயலாளர் கபீர்




(பாறுக் ஷிஹான்)

பொருளாதார பிரச்சினைகளை சீர்செய்ய அனைவரும் இணைந்து தீர்வொன்றைப்பெற்றுத்தர வேண்டும். தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற நிலையில், எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள். எனவே நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலைக் கருத்தில்கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றை பெற போராட வேண்டும் என கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில் சர்வதேச தொழிலாளர் தினம் தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை(30) மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினம் உலகம் பூராகவும் அனுஷ்டிகப்படுகின்ற நிலையில் எமது நாட்டில் உள்ள நிலைமையினால் அத்தினத்தை மிக விமர்சையாக கொண்டாட முடியாதுள்ளது. அது தொடர்பில் நாம் கவலையடைகின்றோம். அந்த வகையில் எமது நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் இந்த ஊழியர் தினத்தை அனுஷ்டிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு இந்த நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ள நிலையை பார்க்கின்றபோது மிக வேதனையாக உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நாட்டில் உள்ள ஊழியர்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். தற்போதைய வாழ்க்கை செலவு ஊழியர்கள் மத்தியில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

கல்முனை பொதுச்சந்தையானது குறைந்த ஊழியர்களை கொண்டு சிறப்பாக இயங்கிய ஒரு சந்தையாகும். இந்த தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமர்சையாக கொண்டாடிக்கொண்டிருக்கின்ற நிலையில் எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள்.

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு தீர்வொன்றை பெற ஒற்றுமையாக அனைவரும் போராட வேண்டும் என்றார்.

## போடியார் புலம்பல்!



**ரணிலிட ஊட்டுக்கு நெருப்பு வைச்ச சந்தேக நபராக மின்னல் நிகழ்ச்சி செய்த மகிந்தட கூட்டாளி ஸ்ரீரங்கா முன்னாள் எம்.பிய மே 3ஆம் திகதி நீதிமன்றுக்கு வருமாறு கட்டளை வழங்கப்பட்டுள்ளது எலுவா..? இந்த பொடியன் 2011இல் வாகனம் ஓடி விபத்து நடந்து பொலிசுக்காரன் செத்த வழக்குல இப்ப சிறையில இருக்கிறான்.. மரமேறி விழுந்தவன்மீது மாடேறி மிதித்த கத மாதிரி இந்த ஸ்ரீரங்கா பொடியன் நல்லா மாட்டப்போறான் போல பாவம் மகிந்தட புறா மகனுக்கு இப்படி?**

### தம்பலகாமம் தாயிப் நகர் கோயிலடி வீதி

# செப்பனிடப்படாமையால் போக்குவரத்துக்கு சிரமம்



(கிண்ணியா செய்தியாளர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாயிப் நகர் கோயிலடி வைத்தியசாலை வீதி காபட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளபோதும் சுமார் 100 மீற்றர் இடைவெளி செப்பனிடப்படாமையால் அதன் ஊடாக பயணிப்பதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 'ஒரு இலட்சம் வீதிகளை அமைத்தல்' எனும் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆனாலும் தற்போது அவ்வீதி சேதமடைந்து காணப்படுகிறது. இவ் வீதியானது 3000மீற்றர் நீளம் கொண்டது. இவ்வீதியை வைத்தியசாலை, பாடசாலை மற்றும் அலுவலகங்களுக்குச் செல்லும் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இவ் வீதியானது காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டபோதிலும் இடை நடுவில் சிறிய மதகுக்கான அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அத்துடன் மழை காலங்களில் இப்பாதையூடாக பயணிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. வெள்ள நீர் இதன் ஊடாகவே பாய்வதனால் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. வீதியின் இருபுறமும் வயல் நிலங்களாகையால் இவ்வீதியை விரைவில் செப்பனிட வேண்டிய தேவை உள்ளது.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் ஊடாக விளக்கம் கோரப்பட்ட நிலையில், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இப்பால புனரமைப்புப் பணி கைவிடப்பட்டுள்ளதாகவும் இவ் வீதிக்கான மொத்த ஒதுக்கீடு 90,686,482.38 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மொத்த செலவு 70,0666,181.07 ரூபாவாக காணப்படுவதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மேற்படி வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனை கிறீன்பீல்ட் பள்ளிவாசலின் மீள்கட்டமைப்புக்காக நிதி கையளிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு மக்கள் நலன்சார் சேவைகளை தொடர்ச்சியாக மேற் கொண்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக இளம் முஸ்லிம் பெண்கள் பேரவையின் ஒருங்கிணைப் பில் கல்முனை கிறீன்பீல்ட் பள்ளிவாசலின் மீள்கட்டுமானப் பணிகளுக்காக ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பினால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த நிதிகளுக்கு அமைவாக சில கட்டுமானப் பணிகள் நிறைவுற்றிருந்தன.

இதனைத் தொடர்ந்து கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் இதற்கான ஐந்தாம் கட்ட நிதி உதவியாக மேலும் ஐந்து இலட்சம் ரூபாவை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைத்து பள்ளிவாசல் நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் பலரின் முன்னிலையில் வழங்கினார்.

இப்பள்ளிவாசலின் மீள்கட்டமைப் புக்காக இதுவரை 6 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட இறக்காமல் அமீர் அலிபுர வித்தியாலயத்தின் வித்யாரம்ப நிகழ்வு அதிபர் எம்.எஸ். லாஹிர் தலைமையில் அண்மையில்(25) இடம்பெற்றது. இந்நிகழ்வில் சம்மாந்துறை வலய கோட்டக்கல்வி அதிகாரி முஹம்மது லெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர்களான எஸ்.எல்.ஏ. முனாப், மௌலவி ஐ.எல்.றசீன் ஆகியோரும் கலந்து கொண்டனர். **(பெரியநீலாவணை செய்தியாளர்)**

# சிறுபோக நெற் செய்கை விதைப்பு பணிகள் ஆரம்பம்



(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளிலும் சிறுபோக நெற் செய்கை ஆரம்பமாகியுள்ளது. இருந்தபோதிலும் உழவுக் கூலி உட்பட நெற் செய்கைக்கான ஏனைய சில பொருட்களின் விலை அதிகரித்துள்ளதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இம்முறை சுமார் 7000க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே விவசாயத்துக்கு தேவையான மானிய உரம் ,கிருமிநாசினி உள்ளிட்டவற்றை நிர்ணய விலையில் பெற்றுத் தர வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனையில் காட்டு யானை அட்டகாசம் கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை



(பாண்டிருப்பு செய்தியாளர்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராமங்களில் அண்மைக்காலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கல்முனை நகரை அண்டிய சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, நற்பிட்டிமுனை மற்றும் சேனைக்குடியிருப்பு ஆகிய மக்கள் செறிந்து வாழும் இடங்களில் இரவு வேளையில் உள் நுழையும் காட்டுயானைகள் அங்குள்ள மக்கள் குடியிருப்பு மனைகள், தோட்டங்கள், தென்னை, வாழை, பயனுள்ள மரங்கள் ஆகியவற்றை துவம்சம் செய்கின்றன.

இதனால் ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தங்களது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் மீளவும் கட்டியெழுப்புவதில் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, கரவாகுப்பற்று, வயற்கண்டம் ஊடாக உள் நுழையும் காட்டுயானைகளே கல்முனை பகுதிக்குள் அட்டகாசத்தில் ஈடுபட்டுவருகின்றன. இங்குள்ள கிராமங்களில் போதியளவு தெரு மின் விளக்குகள் இன்மையால் வீதியில் நடமாடும் மக்கள் காட்டுயானைகளை திடீரென கண்டுகொள்வதினால் பீதிக்குள்ளாகின்றனர்.

கடந்தவாரம் நற்பிட்டிமுனை கிராமத்துக்குள் நுழைந்த காட்டுயானைகள் விதை நெல், வாழை, தென்னை போன்ற பயிர்களை துவம்சம் செய்ததுடன் மதில் சுவர்களையும் சேதப்படுத்தின. எனவே கல்முனை பிரதேசத்துக்குள் நுழையும் காட்டு யானைகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**3ஆவது வாரமாக தொடரும் சூடான் உள்நாட்டுப் போர்**

# போர்க் களமாக காட்சியளிக்கும் கார்டூம்; 528 பேர் உயிரிழப்பு; 4500 பேர் காயம்






சூடான் உள்நாட்டுப் போர் 3ஆவது வாரமாக தொடரும் நிலையில் இருதரப்பு மோதல்களில் 528இற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் உலகநாடுகளின் தலையீட்டால் இங்கு 72 மணிநேரம் அமுல்படுத்தப்பட்டிருந்த போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டு வெளிநாட்டினர் உள்நாட்டினர் மோதல் இடம்பெற்று வரும் பகுதிகளிலிருந்து வெளியேறிவரும் நிலையில், ஆங்காங்கே துப்பாக்கிச் சூடு நடைபெற்று வருகின்றது. அதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. கார்டூம் நகரமே போர்க்களமாக மாறியது. தலைநகர் கார்டூமில் உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புப் பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. பல பல்பொருள் அங்காடிகள் மூடப்பட்டுள்ள நிலையில், குறைந்தளவே உணவுப் பொருட்கள் கிடைப்பதால், வரும் நாட்களில் பஞ்சம் ஏற்படுமோ என மக்கள் அஞ்சுகின்றனர்.

போர் நிறுத்தத்தை மீறியதாக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டி வருகின்ற நிலையில் 'ரெட் க்ரொஸ்' அமைப்பின் முதல் மனிதாபிமான உதவிப்பொருட்கள் அடங்கிய விமானம் சூடான் சென்றடைந்துள்ளது.

ஆபிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள சூடானில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இதற்கு இராணுவத்தின் ஒரு பிரிவான துணை இராணுவம் எதிர்ப்பு தெரிவித்து வந்தது. இதனால் இரு தரப்பினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் இடம்பெற்று வந்தநிலையில், கடந்த மாதம் 15ஆம் திகதி தலைநகர் கார்டூமிலுள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் சர்வதேச விமான நிலையம் போன்றவற்றை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக துணை இராணுவம் அறிவித்தது. இதனையடுத்து இருதரப்புக்கிடையே வெடித்த மோதல் தற்போது உள்நாட்டு போராக உருவெடுத்துள்ளது.

இந்த உள்நாட்டு போர் காரணமாக சூடானில் திரும்பிய திசையெங்கும் குண்டுமழை பொழிந்தது. இதனால் அப்பாவி பொதுமக்கள், வெளிநாட்டினர் உட்பட பலர் உயிரிழந்தனர். எனவே, இந்த போரை நிறுத்தும்படி ஐ.நா. சபை மற்றும் உலக நாடுகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது. அதனையேற்று இரு தரப்பினரும் தற்காலிகமாக போர் நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனை பயன்படுத்தி இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகள் தங்களது நாட்டின் தூதரக அதிகாரிகள், பொதுமக்களை விமானங்கள் மூலம் பத்திரமாக தாயகம் திரும்ப ஏற்பாடுசெய்தனர்.

சூடானிலிருந்து செங்கடலைதாண்டி 5000இற்கும் மேற்பட்டோர் சவூதி அரேபிய கப்பல்களின் ஊடாக பாதுகாப்பாக வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், கடந்த 18 நாட்களாக தொடரும் இந்த உள்நாட்டுப் போரில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 528 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் 4 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

**த**
**உலக செய்திகள்**

## ஐ.எஸ். தலைவர் அபு ஹுசேன் துருக்கி இராணுவத் தாக்குதலில் பலி

**ஜனாதிபதி ஏரோடகன் உறுதி**



துருக்கி இராணுவத்தினர், சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் அபு ஹூசேன் குவாரேஷியை சுட்டுக் கொன்றுள்ளார் என துருக்கி ஜனாதிபதி ஏரோடகன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து துருக்கியில் செய்தியாளர்களிடம் பேசிய ஏரோடகன், நீண்ட காலமாக உளவுத்துறையினர் அபு ஹூசேனை கண்காணித்து வந்ததாகக் கூறினார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவர் கொல்லப்பட்டதாக அவர் உறுதி செய்தார். தீவிரவாத இயக்கங்கள் மீது தொடர்ந்து பாரபட்சமற்ற யுத்தம் தொடரும் என்றும் ஏரோடகன் உறுதிபடத் தெரிவித்தார்.

துருக்கியில் தீவிரவாதிகளின் தாக்குதலால் இதுவரை 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

# 600 குழந்தைகளுக்கு தந்தையா? அதிர்ச்சியில் நீதிமன்றம்

நெதர்லாந்தில் விந்தணு தானம் மூலம் 550இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தந்தையானவருக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நெதர்லாந்தைச் சேர்ந்த ஜோனாதன் ஜேக்கப் (வயது 41). இவர் கடந்த 2007ஆம் ஆண்டிலிருந்து குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களுக்கு உதவிடும் நோக்கத்தில் விந்தணுக்களை தானம் செய்து வருகிறார். இதனை ஒரு சேவையாகத் தொடங்கிய இவருக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. அதன் காரணமாகப் பின் நாளில் இதையே தொழிலாக மாற்றி விட்டார்.

நெதர்லாந்தின் செயற்கை கருத்தரிப்பு சட்ட விதிமுறைகளின்படி, விந்தணு தானம் மூலம் ஒருவர் 12க்கும் மேற்பட்ட பெண்கள் கருத்தரிப்பிற்கு காரணமாக இருக்கக் கூடாது. அதேசமயம், செயற்கை கருத்தரிப்பின் மூலம் 25இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஒருவர் மட்டுமே தந்தையாக இருக்க அனுமதியும் கிடையாது.

இந்நிலையில், நெதர்லாந்திலுள்ள 11 செயற்கை கருத்தரிப்பு மையங்கள், பிற நாடுகளில் இரண்டு மையங்கள் என 13 மையங்களின் மூலமாக ஜோனாதன் தனது விந்தணுவை தானம் செய்துள்ளார். இந்த தானங்களின் விவரங்களை வெளிப்படுத்தாமல் இதுவரை 600 குழந்தைகள் பிறப்புக்கு இவர் உதவியாக இருந்துள்ளார். இவர் மூலமாகக் கருவுற்றுப் பிரசவித்த பெண்ணொருவர் இந்த தகவலைக் கேட்டு அதிர்ச்சிடைந்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு செயற்கை கருத்தரிப்பு மையங்கள் இனிமேல் ஜோனாதன் ஜேக்கப்பின் விந்தணுக்களை தானம் செய்யக் கூடாது எனத் தடை விதித்தது.

ஆனால் இவர், வெளிநாட்டு தம்பதிகள், உள்நாட்டிலுள்ள தம்பதிகள் என அனைவரையும் ஒன்லைன் மூலம் தொடர்பு கொண்டு தனது சேவையைத் தொடர்ந்து செய்து வந்துள்ளார் என்பதைக் கேட்டு அந்தப் பெண் அதிர்ச்சியடைந்துள்ளார்.



500இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஒருவர் மட்டுமே தந்தை என்றால் இவர் மூலமாக மரபணுக்களின் பரிமாண வளர்ச்சி உலகின் பல்வேறு நாடுகளில் இருக்கக்கூடும். ஒரே தந்தையின் கீழ் பல்வேறு நாடுகளில் பிறந்த உடன்பிறப்புகள் உண்மை தெரியாமல் எதிர்காலத்தில் திருமணப் பந்தத்தில் ஈடுபட்டால் சகோதரத்துவம் பாழாகிவிடும் என்பது வேதனைக்குரிய விடயமாக பார்க்கப்படுகிறது. பின்னால் தெரிய வந்தால் இவர்கள் உடல் ரீதியாக மட்டுமின்றி உளவியல் ரீதியாகவும் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி விடுவார்கள். இனிமேல் இவர் யாருக்கும் விந்தணு தானம் செய்யக்கூடாது. அதற்குத் தடை விதிக்க வேண்டும் என நினைத்து அந்தப் பெண் ஹாக் நகரிலுள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதேபோல் மற்றொரு தொண்டு நிறுவனமும் ஜோனாதனுக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருக்கிறது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, ''இந்த வழக்கு குறித்துத் தீர்ப்பு அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஜோனாதன் ஜேக்கப் யாருக்கும் இனிமேல் விந்தணு தானம் செய்யக்கூடாது. தனது சேவை தொடர்பாக இனிமேல் விளம்பரப்படுத்தவும் கூடாது'' என உத்தரவிட்டார். ஒருவேளை நெதர்லாந்து நீதிமன்றத்தின் தடையை அவர் மீறினால் ஒரு இலட்சம் யூரோக்கள் செலுத்த நேரிடும்.

ஜோனாதன் ஜேக்கப் இசைக் கலைஞராக இருந்து வருகிறார். தற்போது அவர் கென்யா நாட்டில் வசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

## டேவிட்டின் ஹெட்ரிக் சிக்ஸர்களுடன் மும்பைக்கு த்ரில் வெற்றி



ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டிம் டேவிட்டின் ஹெட்ரிக் சிக்ஸர்களுடன் மும்பை இந்தியன்ஸ் அணி த்ரில் வெற்றியீட்டியது. நடப்பு ஐ.பி.எல். தொடரின் 42ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் நேற்று முன்தினம் மும்பையில் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி ஜெய்ஸ்வாலின் அபார சதத்தின் உதவியுடன் (62 பந்துகளில் 124 ரன்கள்) 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 212 ரன்கள் குவித்தது. 213 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய மும்பை அணிக்கு கடைசி ஓவரில் 17 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் முதல் 3 பந்துகளில் டிம் டேவிட் அடுத்தடுத்து 3 சிக்சர்களை பறக்கவிட்டார். இதன் மூலம் 19.3 ஓவரில் மும்பை இந்தியன்ஸ் 6 விக்கெட்களினால் வெற்றியீட்டியது. டிம் டேவிட் 14 பந்துகளில் 45 ரன்களை குவித்தார்.

**விளையாட்டு செய்திகள்**
thamilansports@gmail.com

**TATA IPL**
**இன்றைய போட்டி**
போட்டி இல - 44
குஜராத் எதிர் டெல்லி
நேரம் - இரவு 7.30
இடம் - அஹமதாபாத்

## பரிஸ் ஒலிம்பிக் ஜோதியின் பாதை ஜூனில் வெளியாகும்



(ரமணி)

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் அடுத்த ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டியின் முன்னோட்டமான ஒலிம்பிக் ஜோதியின் விரிவான பாதை ஜூன் மாதம் பரிஸில் உள்ள சோர்போனில் வெளியிடப்படவுள்ளது. இது 1894இல் ஒலிம்பிக் போட்டிகளின் மறுமலர்ச்சிக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட இடமாகும்.

இந்த அறிவிப்பு ஜூன் 23 அன்று "ஒலிம்பிக் தினத்தில்" வெளியிடப்பட உள்ளது. இது 129 ஆண்டுகளைக் குறிக்கும் திகதி. பரீஸ் 2024 பாதையானது பிரான்ஸ் முழுவதும் உள்ள 60க்கும் மேற்பட்ட துறைகளில் உள்ள சமூகங்களை அழைத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒலிம்பிக் ஜோதியில் பங்குபற்றுபவர்கள் புகழ்பெற்ற பிரெஞ்சு வடிவமைப்பாளர் Mathieu Lehanneur உருவாக்கிய டார்ச்சை எடுத்துச் செல்வார்கள். 1900, 1924ஆம் ஆண்டுகளில் பரிஸில் ஒலிம்பிக் நடைபெற்றது. அப்போது ஒலிம்பிக் டார்ச் அறிமுகப்படுத்தப்படவில்லை.

## உலக செஸ் சம்பியனானார் டிங் லிரன்



கஜகஸ்தான் அஸ்தானா நாக்ரில் நடந்த 2023 கிளாசிக்கல் உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சியை எதிர்த்து விளையாடிய சீன வீரரான டிங் லிரன் டைபிரேக்ஸில் தோற்கடித்து உலக செஸ் சம்பியனானார். ரஷ்யாவின் மேக்னஸ் கார்ல்சனின் தசாப்த கால ஆட்சியை டிங் லிரன் முடிவு கட்டினார்.

ஞாயிற்றுக்கிழமை அஸ்தானாவில் நடந்த முதல் டை-பிரேக்கரின் நான்காவது ரேபிட் கேமில் தனது ரஷ்ய போட்டியாளரான இயன் நெபோம்னியாச்சியை தோற்கடித்து சீனாவின் டிங் லிரன் அரியணை ஏறினார். உலக சம்பியன்ஷிப் போட்டியில் இருந்து கார்ல்சன் விலகினார். கடந்த ஆண்டு கேண்டிடேட்ஸ் போட்டியில் சீனர்கள் ரஷ்யனைப் பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தைப் பிடித்தனர். உலக செஸ் சம்பியன் பட்டத்தை வென்ற 17ஆவது வீரர் டிங் லிரன்.



ஐ.பி.எல் தொடர் ஆரம்பிக்கப்பட்டு 1000ஆவது போட்டி நேற்று முன்தினம் மும்பை வென்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதன் போது மும்பை அணித் தலைவர் ரோஹித் ஷர்மா, ராஜஸ்தான் அணித் தலைவர் சாம்சன், சங்கக்கார, சச்சின் ஆகியோருக்கு பி.சி.சி.ஐயினால் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

## தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் கடினப்பந்து கிரிக்கெட் மற்றும் சதுரங்கப் போட்டிகள்




(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சிக் கல்வி வலயமானது தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் முன்னெடுத்த தென்மராட்சியின் முன்னணிப் பாடசாலைகளுக்கு இடையிலான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மற்றும் சதுரங்கப் போட்டி ஆகியவற்றின் இறுதிப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை மதியம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் கலந்து சிறப்பித்திருந்தார். மேலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி லலிதாமலர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், தென்மராட்சி அபிவிருத்திக்கழக செயலாளர் பாலச்சந்திரன், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் சர்வதேச விளையாட்டு இணைப்பாளர் ம.சிறீதாசன் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் வி.சுதர்சன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகிய அணிகள் மோதின. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் மறைந்த உறுப்பினர் யோ.ஜெயக்குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. அத்துடன் சதுரங்கப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கும் வெற்றிக் கிண்ணம் மற்றும் பணப் பரிசில் ஆகியன வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7